# வருடாந்த அறிக்கை - 2020

---

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

இலக்கம் 428/11ஏ, முதலாவது மாடி, டென்ஸில்
கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
தொலைபேசி இலக்கம்: +94112879539
தொலைநகல் இலக்கம்: +94112879540
மின்னஞ்சல் முகவரி: witness.protection.srilanka@gmail.com

# உள்ளடக்கம்


- தலைவரின் செய்தி 04
- பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 06
- தூரநோக்கு மற்றும் செயற்பணி 07
- நிறைவேற்று சுருக்கம் 8-13
- அறிமுகம் 14-16
- குறிக்கோள்கள் 17
- குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் 18
- அதிகார சபையின் தொழிற்பாடுகளும் மற்றும் கரும பணிகளும் 19-23
- பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு 24-27
- முகாமைத்துவ சபை - 2019 26-27
- பதவியணி பற்றிய விபரம் - 2019 28-32
  - ✓ சிரேஷ்ட முகாமைத்துவ சபை
  - ✓ துணைப் பதவியணி ஊழியர்கள்
    - முகாமைத்துவ உதவியாளர்கள்(தொழில் நுட்பம் சாரா)
    - சாரதிகள்
    - அலுவலக உதவியாட்கள்
    - பதவியணி ஊழியர்கள் பற்றிய விபரம்
- செயலாற்றுகை பற்றிய அறிக்கை 33-58
- நிதி முன்னேற்றம் (இறுதிக் கணக்குகள்) 59-84
- கணக்காய்வு அறிக்கை 84-92

# தலைவரின் செய்தி



2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமையை நான் இலங்கை வரலாற்றில் முக்கியமான திருப்புமுனையாக கருதுகின்றேன். குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறிமுறைக்கு பங்களிக்கும் போது குற்றத்தால் பலியானவர்களும் மற்றும் சாட்சியாளர்களும் மறுபடியும் பாதிப்புக்கு ஆளாக்கப்படுதல், குற்றவாளிகளினால் ஏற்படுத்தப்படும் அழுத்தம், பாதிப்புகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றின் காரணமாக அவர்களின் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்படுகின்றன. ஆகையால் அவர்களை பாதுகாக்கும் நிமித்தம் இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக முறையான ஒரு வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது இலங்கைக்கும் மற்றும் சர்வதேச ரீதியிலும் மிகவும் முக்கியமானதாகும். இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி எமது இந்த அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டது. இந்த அதிகார சபை 2016 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறும் வகையில் நீதி அமைச்சரது அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனமாக 1967/8 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியின் மூலம் தாபிக்கப்பட்டது.

முதல் கட்டத்தில் அதாவது 2016 ஆம் மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் புதிய ஒரு நிறுவனமாக தாபிப்பு பெற்ற எமது இந்த அதிகார சபையை 2018 ஆம் மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலும் மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிலும் கோவிட் தொற்றுநோய் பரவியிருந்த நிலையிலும் எமது சேவைகளை வினைத் திறன் வாய்ந்ததாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் நிறைவேற்றக் கூடிய வகையில் ஒரு அடித்தளத்தை இடுவதற்கு முடிந்தமையை நான் எமக்கு கிடைத்த ஒரு பாக்கியமாக கருதுகின்றேன். குறித்த இந்த சட்டத்தின் பிரகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளையும் மற்றும் கரும பணிகளையும் நிறைவேற்றும் பொருட்டு தாபிப்பு பெற்ற எமது இந்த அதிகார சபையும் மற்றும் குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான பிரிவும் ஏற்கெனவே இந்த நாட்டுப் பிரஜைகளின் சார்பாக மிகவும் காத்திரமான முறையில் தொழிற்பட்டு வருகின்றனது. இந்தக் குறுகிய ஒரு காலப் பகுதியினுள் அடைந்துள்ள

முன்னேற்றத்துடனும் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டமையின் ஊடாக கிடைத்த அனுபவத்துடனும் மேலும் பயணிப்பது எமது ஏகமனதாக குறிக்கோளாகும்.

இந்த சட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும் மற்றும் இந்த அதிகார சபையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து கிடைத்த பங்களிப்பையும் மற்றும் எமது அதிகார சபையின் கட்டமைப்பு சார்ந்த சூழலை உருவாக்குவதற்கும் மற்றும் பேணிச் செல்வதற்கும் என நல்கப்படும் அரச பங்களிப்பையும் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் நினைவுகூற விரும்புகின்றேன்.

2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தொடர்பாக இந்த செய்தியை விடுப்பதற்கு கிடைத்தமையை பெரும் மகிழ்ச்சியாகவும் பெரும் பாக்கியமாகவும் கருதுகின்றேன். குற்றத்தால் பாலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான ஓர் நாடாக இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கில், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபை பயணிக்கின்ற தனது பணயத்தில் அணிதிரண்டுள்ள முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், பணிப்பாளர் நாயகம் அடங்கலாக இந்த சபையினது ஊழியர்களையும் மிகவும் கௌரவத்துடன் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

சுஹத கே. கமலத்
தலைவர்

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



குற்றத்தால் பாலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் வருடாந்த அறிக்கைக்கு இந்த குறுகிய செய்தியை விடுப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். 2020 ஆம் ஆண்டில் இந்த அதிகார சபையின் முக்கிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் இலக்குக்கு உயிரூட்டும் பொருட்டு இந்த சந்தர்ப்பத்தை ஒரு விஷேட சந்தர்ப்பமாக ஆக்கிக் கொள்கின்றேன். அத்துடன் இந்த வருடாந்த அறிக்கைக்கு ஒரு செய்தியை விடுப்பதிலும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தை நடைமுறைப்படுத்தி குற்றத்தால் பாலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை 2016 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதையடுத்து கடந்த குறுகிய காலப் பகுதியினுள் கணிசமான முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது என்பதை கூற வேண்டியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் 31 எண்ணிக்கையாக இருந்த எமது அதிகார சபையினது பதவியணி ஊழியர்களின் எண்ணிக்கையை 2020 ஆம் ஆண்டாகும் போது 36 வரை அதிகரிக்க முடிந்தது. இந்த அதிகார சபையின் தொழில்நுட்ப விடயங்கள் மற்றும் நிருவாக விடயங்கள் ஆகியவற்றுக்கு வழிகாட்டுவதில் துணையாக அமையும் புதிய பதவிகளை தாபித்து அதிகார சபையின் குறிக்கோள்களை அடைவதற்கு துணைபுரியும் கரும விடயங்களை கொவிட்-தொற்றுநோய் நிலைமையிலும் கூட நிறைவேற்ற முடிந்தமை இந்த அதிகார சபையின் முன்னேற்றமான பயணத்திற்கு பயனாக அமையும் என நான் உணர்கின்றேன்.

2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் எமது அதிகார சபைக்கு முறையே 49 எண்ணிக்கையான முறைப்பாடுகளும் 86 எண்ணிக்கையான வேண்டுகோள்களும் மற்றும் 252 எண்ணிக்கையான முறைப்பாடுகளும் கிடைத்திருந்தன. 2020 ஆம் ஆண்டினுள் அத்தகைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை கொவிட்-தொற்றுநோய் நிலவரம் காரணமாக 157 வரை குறைந்துள்ளது. எமது அதிகார சபையின் மூலம் நாட்டின் ஒவ்வொரு மாகாணமும் உள்ளடங்கும் வகையில் நடத்திய நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து பெற்றுக் கொடுக்கப்படும் சேவைகளும் மற்றும் அதிகார சபையின் மூலம் வழங்கப்படும் சேவைகளும் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை அறிவித்தல் பலகைகளில் பிரசுரித்தமை இவ்வாறு முறைப்பாடுகள் கிடைத்தமைக்கு காரணமாக அமைந்துள்ளது. அதே போல், 1985 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் எமது அதிகார சபையை உடனடியாக தொடர்பு கொள்ளக் கூடிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்பட்டமையின் ஊடாக 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில்

தொலைபேசி மூலமாக 841 முறைப்பாடுகள் கொவிட்-தொற்றுநோய் நிலைமையிலும் கிடைத்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP), ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் நிதியம் (Unicef), தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, ட்ரான்ஸ்பேரென்ஸி இன்டர்நெஷனல் (Transparency International) நிறுவனம், சட்டமா அதிபரின் திணைக்களம், கல்வி அமைச்சு, பொலிஸ் திணைக்களம் போன்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட்டதன் ஊடாக எமது அதிகார சபையினால் தனது அபிலாஷைகளை அடைந்து கொள்ள முடிந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். மேலும் எமது இந்த அதிகார சபைக்கு ஒரு இணையத்தள வசதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கையை எடுக்க முடிந்தமையும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

குற்றத்தால் பலியானவர்களும் மற்றும் சாட்சியாளர்களும் அச்சமின்ற தமது உரிமைகளை பாதுகாத்து சட்டத்தின் இறைமை உறுதிசெய்யப்படும் வகையில் சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு தேவையான பாதுகாப்பையும் மற்றும் உதவியையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஒரு ஜனநாயக சமூகத்தின் சிறப்பம்சத்தை மேம்படுத்துவது எமது அதிகார சபையின் எதிர்பார்ப்பாகும். அந்த நோக்கத்தின் நிமித்தம் உச்சளவான பங்களிப்பை நல்குவதற்கு நாம் எதிர்காலத்திலும் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்பதை இங்கு விஷேடமாக குறிப்பிடுவதற்கு விரும்புகின்றோம்.

உதயகுமார அமரசிங்க
பணிப்பாளர் நாயகம்

## ✓ தூரநோக்கு

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான ஒரு நாடாக இலங்கையை கட்டியெழுப்புதல்

## ✓ செயற்பணி

குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் பாதுகாத்தல், அவற்றை ஊக்குவித்தல், செயல் வலுப்பெறச் செய்தல் மற்றும் செயற்படுத்துதல்

# நிறைவேற்று சுருக்கம்

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபையின் அலுவலகம் 2016 ஆம் ஆண்டு முதல் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 428/11 ஆம் இலக்க கட்டிடத்தின் முதலாம் மாடியில் தாபிக்கப்பட்டுள்ளது. அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் முகாமைத்துவ சபை மேன்மை தங்கிய ஜனாதிபதி நியமித்த ஐந்து (05) உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரனி திரு சுஹத கே. கமலத், திரு உதயகுமார அமரசிங்க, மருத்துவர் திரு அஜித் தென்னகோன், மருத்துவர் திரு நீல் பெர்னாந்து, சட்டத்தரனி திரு சமன் சேனாதீர ஆகியோரும் மற்றும் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் ஏழு (7) உறுப்பினர்களும் இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபையில் அடங்குகின்றனர். உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் ஏழு (7) உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரனி திரு சுசந்த பாலபட்டபெந்தி, திரு எல்.எஸ். பத்திநாயக்க, சட்டத்தரனி திரு எச்.ஜி. ஹுசைன்/மருத்துவர் திரு நிமல் கருணாசிறி, சட்டத்தரனி திருமதி பியுமந்தி பீரிஸ், திருமதி என்.எச்.எம்.டப்ளியூ.என். ஹேரத் குமாரி மற்றும் திருமதி எம்.எஸ்.பி. சூரியப்பெரும ஆகியோரும் எமது அதிகார சபையின் முகாமைத்துவ சபையில் உள்ளடங்கியிருந்தனர். மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் ஜனாதிபதி சட்டத்தரனி சுஹத கே. கமலத் அவர்கள் இந்த அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள்.

இந்த தேசிய அதிகார சபைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 56 ஊழியர்களுடைய பதவியணிக்கு 2020 ஆம் ஆண்டளவில் 36 அலுவலர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டனர். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேலும் ஒரு சட்ட உத்தியோகத்தர் பதவிற்கும் மற்றும் ஒரு பணிப்பாளர் பதவிற்கும் (பாதுகாப்பு) மற்றும் இரண்டு பணிப்பாளர்கள் (உதவு சேவை) பதவிகளுக்கும் உரிய ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டது. எமது அதிகார சபையின் திறன்களை அபிவிருத்தி செய்யும் முகமாக உரிய பிரிவுகளில் திறன்கள் அபிவிருத்தி வேலையரங்குளுக்கு பதவியணி ஊழியர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டதால் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் 2 முகாமைத்துவ சபைக் கூட்டங்களை மாத்திரம் நடத்த முடிந்தது. பணிப்பாளர்களின் பங்குபற்றலில் 10 சிரேஷ்ட முகாமைத்துவக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 157 ஆகும். அந்த எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டு கிடைத்த 252 முறைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது, கொவிட்-தொற்றுநோய் நிலவரத்தின் காரணமாக 60% வீதத்தால் குறைந்துள்ளது. இந்த முறைப்பாடுகளில், சட்டப் பிரிவினால் குற்றங்களை விசாரணை செய்வதற்காக பொலிஸ் பிரிவுகளுக்கு அல்லது ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைத்த 34 முறைப்பாடுகளும், சட்டப் பிரிவினால் நீதிமன்றத்தின் அரவணைப்புப் பிரிவுக்கு குறிப்பீடு செய்யப்பட்டிருந்த 53 எண்ணிக்கையான முறைப்பாட்டுக் கோவைகளும், இந்த அதிகார சபையின் பல

உதவிகளை பெற்றுக் கொள்ளும் முகமாக விண்ணப்பிக்கப்பட்டதன் பின்னர் உதவி வழங்கப்பட்டு வருகின்ற மற்றும் உதவி வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்த 11 எண்ணிக்கையான முறைப்பாடுகளும், இந்த அதிகார சபையின் விடயப் பரப்பில் வராத 48 எண்ணிக்கையான முறைப்பாடுகளும் அடங்குகின்றன. 2020 ஆம் ஆண்டு இந்த அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாடுகளில் முழுமையாக நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 44 ஆகும். மேலும் இந்த அதிகார சபையின் முன்னிலையில் குற்றத்தால் பலியானவர்களின் அச்சுறுத்தல் பற்றிய வாக்குமூலங்களை கோவைப்படுத்துவதன் மூலம் நீதிமன்றத்தின் ஊடாக குற்றத்தால் பலியானவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு நஷ்டஈடுகளை பெற்றுக் கொடுப்பதற்கு உதவுதல், நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற வழக்குகளின் சாட்சிகளை கட்புல மற்றும் செவிப்புல சாதனங்களின் மூலம் தூர இடங்களிலிருந்து வழிநடத்துவதற்கு உதவுதல் மற்றும் இந்த அதிகார சபைக்கு எதிராக பல நபர்களினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகளில் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் முதலிய விடயங்கள் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இந்த அதிகார சபைக்கு உடனுக்குடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கமாக 1985 எனும் தொலைபேசி இலக்கம் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த தொலைபேசி இலக்கத்திற்கு 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் கிடைத்த தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கை 814 ஆகும்.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதி வரை அரவணைப்புப் பிரிவுக்கு கிடைத்த 53 வேண்டுகோள்கள் மற்றும் முறைப்பாடுகள் ஆகியவற்றில் 36 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்ற மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள 14 முறைப்பாடுகளும் மற்றும் மூடப்பட்டிருந்த 02 முறைப்பாடுகளும் இவற்றில் அடங்குகின்றன. மேலும் குறித்த சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவிடமிருந்து 38 கட்டளைகளும் மற்றும் நீதிமன்றங்களிலிருந்து 5 கட்டளைகளும் இந்த அதிகார சபைக்கு கிடைத்துள்ளன. நீதிமன்றங்களிலிருந்து கிடைத்த அந்த 05 கட்டளைகளும், பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்ற 9 கட்டளைகளும், அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதற்காக குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மற்றும் இடைக்காலப் பாதுகாப்பை வழங்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ள 17 கட்டளைகளும், அச்சுறுத்தல்களை மதிப்பிடும் பொருட்டு பொலிஸ் பிரிவுகளுக்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ள 02 கட்டளைகளும், அச்சுறுத்தல் அறிக்கையின் பிரகாரம் அச்சுறுத்தல் இருப்பதால் பாதுகாப்பை வழங்குமாறு விடுக்கப்பட்டிருந்த 02 கட்டளைகளும், பாதுகாப்பை வழங்கி கோவை மூடப்பட்டுள்ள 02 கட்டளைகளும், கோவை மூடப்பட்டுள்ள 11 கட்டளைகளும் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் குறித்த சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற அல்லது அறை நீதிமன்ற நடவடிக்கையில் பங்குபற்றும் முகமாக நீதிமன்றத்திற்கு செல்லும் போது உணவு, தங்குமிட

வசதிகள் மற்றும் போக்குவரத்து முதலிய தேவைகளின் நிமித்தம் செலவாகும் செலவுகளை இந்த அதிகார சபையின் நிதியிலிருந்து செலுத்துமாறு நீதிமன்றங்களிலிருந்து வேண்டுகோள்கள் கிடைக்கும் போது ஆகக்கூடியது ஐயாயிரம் ரூபாவுக்கு அமைய அந்த செலவுகளை செலுத்துவதற்கு, 2019.11.15 ஆம் திகதி நடைபெற்ற இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய இரண்டு வேண்டுகோள்கள் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கிடைத்தன. அந்த வேண்டுகோள்களின் நிமித்தம் நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து (UNDP) 40 மில்லியன் ரூபா பெறுமதியான மானியம் கிடைத்தது. இந்த நிதி இந்த அதிகார சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்பட்டது. குறித்த சட்டத்தின் (13) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த தேசிய அதிகார சபையின் உத்தியோகத்தர்களினதும் மற்றும் பாதுகாப்புப் பிரிவினதும் மற்றும் உதவிப் பிரிவினதும் ஊழியர்களினதும் தொழில் நுட்ப அறிவை மேம்படுத்தும் முகமாக பயிற்சி அளித்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பொலிஸ் விஷேட விசாரணைப் பிரிவு உத்தியோகத்தர்கள், சட்டத்தரனிகள் சங்கத்தின் சட்டத்தரனிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரனிகள், சிவில் சமூக அமைப்புகளின் ஊழியர்கள், கல்வி அமைச்சின் வலயக் கல்வி உத்தியோகத்தர்கள், அம்பாந்தோட்டை மற்றும் காலி மாவட்டங்களின் அரச ஊழியர்கள், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபைக்கும் மற்றும் உதவிப் பிரிவுக்கும் மற்றும் பாதுகாப்புப் பிரிவுக்கும் புதிதாக ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள ஊழியர்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், மேல் மாகாணத்தின் குற்றம் மற்றும் சிறு குற்ற விடயத்திற்கு பொறுப்புடைய அதிகாரிகள் மற்றும் மேல் மாகாணத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரை விழிப்பூட்டும் மற்றும் உணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இது தவிர, ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் நிதியத்தின் (Unicef) மூலம் நேரடியாக நிதி பெறப்பட்டு இந்த அதிகார சபையில் ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு வேலையரங்கு நடத்தப்பட்டது. குறித்த கரும பணிகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் முகமாக 86 ஊடகவியலாளர்களினதும் மற்றும் ஊடக நிறுவனங்களின் தலைவர்களினதும் பங்குபற்றலில் குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டம் பற்றி விழிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 9 ஆம் திகதி பத்தரமுல்ல Waters’ Edge ஹோட்டலில் நடத்தப்பட்டது. 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த அதிகார சபைக்கு முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டது. இந்த அதிகார சபையின் பணிகளை இலகுவாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 19 ஆம் திகதி ஒரு தொழில் நுட்ப வேலையரங்கு முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களினதும் மற்றும் தொழில் நுட்பப் பிரிவின் பணிப்பாளர்களினதும் மற்றும்

பொலிஸ் பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரிகளினதும் பங்குபற்றலில் நடத்தப்பட்டது. இதன் நிமித்தம் இந்த அதிகார சபையின் தலைவர் மற்றும் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் மற்றும் UNDP நிறுவனத்தின் தொழில் நுட்ப நிபுணர் ஆகியோர் வளநபர் பங்களிப்பை பெற்றுத் தந்தனர். இந்த விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக எமது அதிகார சபைக்குரிய சட்டங்களை நடைமுறைப்படுத்தும் செயல்முறையில் நேரடியாக பங்குகொள்ளும் தரப்புகளுக்கு பல விஷேட உரைகள் எமது அதிகார சபையின் முகாமைத்துவ சபையிலுள்ள நிபுணர்களினால் நிகழத்தப்பட்டன. இந்த அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களிலும், நாங்கள் டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் எமக்கு வழங்கிய கைந்நூல்களையும் மற்றும் இந்த அதிகார சபையின் தொழில் நுட்ப கரும பணிகள் அடங்கிய துண்டு பிரசுரங்களையும் மற்றும் சுருக்க அறிக்கைகளையும் பகிர்ந்தளித்தோம். சமூக சீர்திருத்தங்கள், சிறுவர்களின் உரிமைகள் ஊக்குவிப்பு தொடர்பாக நன்னடத்தை சம்பந்தமான உத்தியோகத்தர்களையும் மற்றும் மேல் மாகாண குற்ற, சிறு முறைப்பாடுகள் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் பொலிஸ் பிரிவு பொலிஸ் அதிகாரிகளையும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு எதிர்பார்த்தாலும் கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் இந்த அதிகார சபையின் அன்றைய முகாமைத்துவ சபை நியமிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் அவற்றை நடத்த முடியவில்லை. எனினும், எமது அதிகார சபை நாடு முழுதிலுமுள்ள தேசிய பாடசாலைகளுக்கு (353) சிங்கள மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் 862 துண்டுப் பிரசுரங்கள் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடைபெற்ற பாடசாலை அதிபர்களின் மாநாட்டில் அதிபர்களுக்கு அறியப்படுத்தி பகிர்ந்தளித்தது. மேலும் சகல மாகாண பாடசாலைகளுக்கும் (10,366) சொந்தமான மாகாண கல்விப் பணிப்பாளர்களை சந்தித்து (வட மாகாணம் தவிர) அவர்களுக்கு அறியப்படுத்தி சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சுமார் 13,000 துண்டுப் பிரசுரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் (492) சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சுமார் 2,000 துண்டுப் பிரசுரங்கள் உரிய மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரை சந்தித்து (வட மாகாணம் தவிர) அவர்களுக்கு அறியப்படுத்தி பகிர்ந்தளிக்கப்பட்டன. 185 நீதிமன்றங்களுக்கு (மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் முதலியன) சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சுமார் 800 துண்டுப் பிரசுரங்கள் பெற்றுக் கொடுக்கப் பட்டன. அந்தத் துண்டுப் பிரசுரங்கள் தற்பொழுது அந்த நீதிமன்றக் கட்டிடத்தொகுதி வளாகங்களிலுள்ள விளம்பரப் பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆராய்ச்சி நிலையத்தை தாபிக்கும் பொருட்டு புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. UNDP நிறுவனம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் குற்றவியல் கல்விப் பிரிவுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளுக்கு பங்களிப்பு செய்யப்பட்டது. இதற்கான எண்ணக்கருப் பத்திரம் (Concept Note), பிரேரணைகள் (Proposal) மற்றும் நியதிக் குறிப்புகள் (Terms of Reference) என்பன தயாரிக்கப்பட்டன. தொழில் நுட்ப உதவி வழங்கப்பட்டது. அந்த கரும விடயத்தை மேற்கொள்ளும் முகமாக ஸ்ரீலங்கா ரெலிகம் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேலும் குறித்த சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அதிகார சபையின் பாதுகாப்பு நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் இந்த நிதியத்தின் நிதி வலிமை 10.87 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் நிதி முன்னேற்றமாக அரசாங்கத்தின் மீண்டெழும் செலவுகள் 100% வீதமும் மற்றும் அரசாங்கத்தின் மூலதன செலவுகள் 35% வீதமும் என இலக்குகள் அடையப்பட்டன.

# அறிமுகம்

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாக்கும் பொருட்டு முறையான ஒரு சட்ட வரையறையுடைய ஒரு வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி குற்றத்தால் பாதிக்கப்படுவோருக்கு அதனூடாக நீதியையும் நியாயத்தையும் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்காக பாராளுமன்றத்தினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் கீழ், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளது. பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலக்கம் 428/11ஏ எனும் இடத்தில் அமைந்துள்ள கட்டிடத் தொகுதியின் முதலாவது மாடியில் சுமார் 5300 சதுர அடி பரப்பளவான ஒரு கட்டிடத்தில் இந்த அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளது. மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் 2016.01.08 ஆம் திகதி இந்த அதிகார சபை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. பின்னர் 1966/02 ஆம் இலக்க 2016.05.09 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் குறித்த அதிகார சபை அரசியலமைப்பின் 43(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2016.04.27 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் வகையில் கௌரவ நீதி அமைச்சரின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகையால், நீதி அமைச்சர் 1967/08 ஆம் இலக்க 2016.05.16 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானியில் விடுத்த அறிவித்தலின் மூலமாக 2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் சகல பிரிவுகளும் 2016.05.18 ஆம் திகதி முதல் செயல்வலுப் படுத்தப்பட்டுள்ளன.

குறித்த சட்டத்தின் 12(ஆ) பிரிவின் பிரகாரம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டுள்ளது. இந்த சபை நீதி அமைச்சின் செயலாளர், பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்புடைய அமைச்சரின் அமைச்சு செயலாளர், மகளிர் விவகாரங்களுக்கும் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்குமான விடய பொறுப்பு அமைச்சர்களின் அமைச்சுக்களினது செயலாளர்கள் அல்லது அத்தகையவர்களின் பிரதிநிதிகள், மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், சட்டமா அதிபரின் பிரதிநிதி ஒருவர், மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியை வகிக்கும் பொலிஸ்மா அதிபரின் பிரதிநிதி ஒருவர் உள்ளடங்கலாக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் ஏழு (7) உறுப்பினர்களையும், குற்றவியல், குற்றத்திற்கான நியாய முறைமை, மனித உரிமைகள் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு அல்லது மருத்துவ விஞ்ஞானத்தில் அல்லது அதனுடன் தொடர்புடைய தொழில் கல்வி அல்லது தொழில் தகைமை மற்றும் அனுபவம் உடைய நபர்களுக்கு இடையில் மேன்மை தங்கிய ஜனாதிபதியினால் தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து உறுப்பினர்களையும் கொண்டமைந்துள்ளது. மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராகிய சொலிசிட்டல் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரனி

சுஹத கே. கமலத் அவர்கள் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல் வலுப்பெறும் வகையில் இந்த அதிகார சபையின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

**குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:**

[குறித்த சட்டத்தின் பிரிவு (2)]

1. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் பிரதிபலிக்கச் செய்தல், உறுதிப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல், அத்தகைய உரிமைகளையும் அதே நேரம் உரித்துக்களையும் ஊக்குவித்தல், பாதுகாத்தல், செயல்வலுப் பெறச் செய்தல், நடைமுறைப்படுத்துதல் ஆகிய அம்சங்களின் நிமித்தம் ஒரு பொறிமுறைத் திட்டத்தை தயாரித்தல்.
2. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவியையும் அதே நேரம் பாதுகாப்பையும் வழங்குதல்.
3. குற்றம் ஒன்றை புரிந்ததால் குற்றவாளியாக காணப்படும் நபர்களிடமிருந்து குற்றத்தால் பலியாயோருக்கு நஷ்டஈட்டை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.
4. மீள்தாபிப்பு, நஷ்டஈடு, குறைநிரப்பு மற்றும் புனர்வாழ்வு என்பன அடங்கலாக குற்றத்தால் பலியானவர்களுக்கு உதவிகளை பெற்றுக் கொள்ள ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
5. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் உரித்துக்களையும் ஊக்குவித்தல், மேம்படுத்துதல் முதலியவற்றை முன்னிட்டு அரசாங்க நீதிமன்ற உத்தியோகத்தர்களினதும், அரசாங்க ஊழியர்களினதும் பொறுப்புக்களையும் கடமைகளையும் பிரதிபலிக்கச் செய்தல்.
6. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் எதிராக செய்யக் கூடிய குற்றங்களை குறிப்பிடுதல், அத்தகைய குற்றங்களை செய்யும் நபர்களுக்கு எதிராக விதிக்கக் கூடிய தண்டனையை நிர்ணயிக்கச் செய்தல்.
7. குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கு உகந்த கொள்கைகளை ஏற்று அத்தகைய கொள்கைகளை செயற்படுத்துதல்.

## குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும்

குற்றத்தால் பாதிக்கப்படும் நபர் ஒருவருக்கு இருக்கின்ற உரிமைகள் [குறித்த சட்டத்தின் பிரிவு (3)]

1. பாதிக்கப்பட்டோரின் கௌரவமும் தனித்துவமும், சமனாகவும் மற்றும் நியாயமாகவும் மதிக்கப்படுதல் - (பிரிவு 3 (1) (அ))
2. குற்றத்தால் பாதிக்கப்படுபவர் சிறுவராக இருந்தால் அவரின் நன்மைகளும் மற்றும் உரிமைகளும் மதிக்கப்படுதல் - (பிரிவு 3 (1) (ஆ))
3. குற்றத்தால் பாதிக்கப்படுவதால் ஏதாவது நட்டம் ஏற்படின், அத்தகைய நட்டத்திற்கு உடனடியாக பொருத்தமான ஒரு உதவியை பெற்றுக் கொள்ளல் - (பிரிவு 3 (1) (இ))
4. உள மற்றும் உடல் ரீதியாக துன்புறுத்தல்கள் இடம்பெறுமாயின், அதன் நிமித்தம் மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொள்ளல் - (பிரிவு 3 (1) (ஈ))
5. அச்சுறுத்தல் மற்றும் பயமுறுத்தல் என்பவற்றிலிருந்து உரிய முறையில் பாதுகாப்பை பெறுதல் - (பிரிவு 3 (1) (உ))
6. பாதிக்கப்பட்டவர் வேண்டுகோள் விடுத்துள்ள சந்தர்ப்பத்தில், இந்த அதிகார சபை அல்லது பிரிவு மூலமாக சட்ட நிலவரங்கள் பற்றி அறிந்து கொள்ளல், முறைப்பாட்டின் விசாரணை பற்றி அறிந்து கொள்ளல், நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி அறிந்து கொள்ளல் மற்றும் தேவையான மருத்துவ, சமூக சேவைகளையும், ஏனைய சேவைகளையும் பற்றி அறிந்து கொள்ளல் - (பிரிவு 3 (1) (ஊ))
7. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கொண்டு ஒரு முறைப்பாட்டை பதிந்து கொள்ளல் மற்றும் அந்த முறைப்பாட்டை முழுமையாக விசாரணை செய்து கொள்ளல் - (பிரிவு 3 (1) (எ))
8. ஒரு குற்றம் தொடர்பில் பல விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்ற காலப் பகுதியில் உரிய சட்டத்தை நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தர் முன்னிலையில் சட்டத்தரனி மூலம் ஆஜராகி காரணங்களை தெரிவித்தல் - (பிரிவு 3 (1) (ஏ))
9. பொலிஸ் மூலமாக நீதிவான் நீதிமன்றத்திற்கு கோவையிடும் நிமித்தம் வேண்டிய அறிக்கைளின் சான்றுபடுத்திய பிரதிகளை பெற்றுக் கொள்ளல் - (பிரிவு 3 (1) (ஐ))
10. பாதிக்கப்பட்டவருக்கு எதிராக புரியப்பட்டுள்ள குற்றம் தொடர்பில் ஒரு வழக்கு நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு முன்னரும் அந்த வழக்கு நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்படும் காலப் பகுதியிலும் சட்டமா அதிபருக்கு காரணங்களை முன்வைக்கும் பொருட்டு ஒரு சட்டத்தரனியின் ஊடாக கடிதங்களை அனுப்புதல் அல்லது பிரதிநிதிகளை நியமித்தல் (பிரிவு 3 (1) (ஒ))
11. உரிய குற்றம் தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளும் விசாரணையாளருக்கு கடிதங்களை அனுப்புதல் அல்லது பிரதிநிதிகளை நியமித்தல் மற்றும் அத்தகைய பிரதிநிதித்துவங்களுக்கான பதில்களை பெற்றுக் கொள்ளல் - (பிரிவு 3 (1) (ஓ))
12. குற்றம் செய்த நபர் குற்றவாளியாக கணிக்கப்பட்ட பின்னர் அந்த குற்றத்திற்கான தண்டனையை நிர்ணயிப்பதற்கு முன்னர், அத்தகைய குற்றம் பாதிக்கப்பட்டவர்களின்

வாழ்க்கையை பாதிக்கும் விதம் பற்றி தனிப்பட்ட ரீதியிலோ அல்லது ஒரு சட்டத்தரனி மூலமாகவோ நீதிமன்றத்திற்கு அறியப்படுத்துதல் - (பிரிவு 3 (1) (ஓ))

13. குற்றவாளி ஒருவர் ஒரு மேன்முறையீட்டை அல்லது ஒரு திருத்தத்தை செய்துள்ளார் என்றிருக்கும் போது அந்த குற்றம் பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கையை பாதிக்கும் விதம் பற்றி தனிப்பட்ட ரீதியிலோ அல்லது ஒரு சட்டத்தரனி மூலமாகவோ நீதிமன்றத்திற்கு காரணங்களை தெரிவித்தல் - (பிரிவு 3 (1) (ஔ))

14. குற்றத்தை செய்த நபருக்கு மன்னிப்பு வழங்குவதை கருத்திற் கொள்ளும் போது அல்லது ஒரு தண்டனையை குறைப்பதை கருத்திற் கொள்ளும் போது அது பற்றிய அறிவித்தலை பெற்றுக் கொள்ளல், அந்த குற்றம் பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதம் பற்றி தனிப்பட்ட ரீதியிலோ அல்லது சட்டத்தரனி மூலமாகவோ உரிய அதிகார சபைக்கு அறியப்படுத்துதல் - (பிரிவு 3 (1) (ට))

**ஒரு குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு இருக்கின்ற உரிமைகள்(<u>குறித்த சட்டத்தின் பிரிவு</u> (4))**

1. குற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள நபர் ஏதாவது ஒரு நீதிமன்ற நடவடிக்கையில் கலந்து கொள்வதால், அவருக்கு செலவு செய்ய நேரிடும் செலவுகள் தொடர்பில் அதிகார சபையிலிருந்து ஏதாவது பணத் தொகையை பெற்றுக் கொள்ளல் - (பிரிவு 4 (1))
2. குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் என்ற வகையில் உடல் அல்லது உள ரீதியாக அனுபவித்த கஷ்டங்களுக்கு உகந்த மருத்துவ சிகிச்சை, ஆலோசனை சேவை முதலியவற்றை அரசாங்கத்திடம் கோருதல் - (பிரிவு 4 (2))
3. அரசாங்கத்தினால் மருத்துவ சிகிச்சையை அல்லது ஆலோசனை சேவையை வழங்க முடியாது எனும் சந்தர்ப்பத்தில், அத்தகைய தேவையை தனியார் துறைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பொருட்டு அதிகார சபையிடம் கோருதல் - (பிரிவு 4 (3))

**சாட்சியாளருக்கு இருக்கின்ற உரிமைகள்(<u>குறித்த சட்டத்தின் பிரிவு</u> (5))**

1. சாட்சியாளர்களின் கௌரவமும் தனித்துவமும், சமமாகவும் மற்றும் நியாயமாகவும் மதிக்கப்படுதல் - (பிரிவு 5 (1))
2. ஒரு அடிப்படை உரிமை மீறப்பட்டமை தொடர்பில் தகவல்களை வழங்குதல், ஏதாவது ஒரு குற்றம் தொடர்பில் ஒரு விசாரணை நடைபெறுகின்ற போது சுயமாக சாட்சியம் அளித்தல் அல்லது ஏதாவது ஒரு செய்யப்பட்டமை அல்லது அடிப்படை உரிமை மீறப்பட்டமை தொடர்பில் ஒரு நீதிமன்றத்தில் சாட்சியளிக்கும் போது அந்த சாட்சியாளர் எந்த விதமான இடையூறுகளுக்கும் ஆளாக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை. அத்தகைய ஒரு இடையூறுக்கு எதிராக பாதுகாப்பை பெற்றுக் கொள்ள சாட்சியாளருக்கு உரிமை உண்டு - (பிரிவு 5 (1))

**தகவல்களை வழங்கும் நபர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் (குறித்த சட்டத்தின் பிரிவு** (6))

சாட்சியாளர் அல்லது சாட்சியாளர் அல்லாத எவரேனும் நபர் ஒருவர் தனது பணிபுரியும் நிலையத்தில் நிகழும் ஒரு குற்றம் அல்லது அடிப்படை உரிமை மீறல் தொடர்பான தகவல்களை வழங்குதல், அது தொடர்பில் ஒரு முறைப்பாட்டை செய்தல் அல்லது அது தொடர்பாக ஒரு நீதிமன்றத்தில் சாட்சியமளித்தல் ஆகியவற்றின் காரணமாக அந்த நபருக்கு எந்தவித இடையூறு விளைவிக்கப்படுதல் அல்லது தொழிலை இல்லாமல் செய்தல் என்பவற்றுக்கு எதிராக பாதுகாப்பை பெறுவதற்கு உரிமை உண்டு - (பிரிவு 6)

**அதிகார சபையின் பொறுப்புக்களும் மற்றும் கடமைகளும் (பிரிவு 13))**

1. குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் இனங்கண்டு அவற்றை மதிப்பதை ஊக்குவித்தல்.
2. சாட்சியாளர்களின் உரிமைகளை இனங்கண்டு அவற்றை மதிப்பதை ஊக்குவித்தல்.
3. குற்றத்தால் பாதிக்கப்பட்டோரின் உரிமைகளையும் மற்றும் சாட்சியாளர்களின் உரிமைகளையும் பாதுகாத்தல் அல்லது பாதுகாப்பதற்கான ஒழுங்குகளை செய்தல்.
4. குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் அல்லது சாட்சியாளரின் ஏதாவது ஒரு உரிமை அல்லது உரித்து மீறப்பட்டமை தொடர்பில் கிடைக்கப் பெற்ற ஒரு முறைப்பாட்டின் அல்லது ஏதாவது தகவலின் அடிப்படையில், குற்றத்தால் பாதிக்கப்பட்டோரின் அல்லது சாட்சியாளர்களின் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் இந்த சட்டத்தின் கீழ் இனங்காணுதல், பாதுகாத்தல் மற்றும் ஊக்குவிப்பதை உறுதிசெய்தல் ஆகியவற்றின் நிமித்தம், கூறப்பட்ட அத்தகைய மீறல் தொடர்பாக விசாரணை செய்து அது தொடர்பில் பொருத்தமான சீர்திருத்தல் நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய அதிகார சபையிடம் கேட்டுக் கொள்ளல்.
5. குற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் தேவையான சிகிச்சைகளை அளித்தல், நஷ்டஈடுகளை வழங்குதல், மீள்தாபிப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கை என்பன அடங்கலாக தேவையான உதவிகளை வழங்குதல்.
6. குற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இந்த சட்டத்தின் 29 ஆம் பிரின் மூலம் தாபிக்கப் பட்டுள்ள குற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சியாளர்களுக்குமான நிதியத்தில் இருந்து நஷ்டஈடுகளை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை தயாரித்து அதனை ஏற்று, செயற்படுத்துதல்.
7. இந்த சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குற்றத்தால் பாதிக்கப்பட்டோரதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் பற்றி பொது மக்களுக்கு அறியப்படுத்துதல்.
8. குறிப்பாக குற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சியாளர்களுக்கும் -
    i. பயனுள்ள பாதுகாப்பு
    ii. தேவையான சிகிச்சை, புனர்வாழ்வு, ஆலோசனைகள்
    iii. ஏனைய பொருத்தமான உதவிகள் என்பன அடங்கலாக

குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் இந்த சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் செயல் வலுப்பெறும் நிமித்தம் பிரயோகிக்க மற்றும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அல்லது செயற்படுத்த வேண்டிய பொருத்தமான விஷேட நடவடிக்கைகள் தொடர்பில் பொதுவாக அல்லது ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தனித்தனியாக கருத்திற் கொள்வதன் அடிப்படையில், இலங்கை பொலிஸ் திணைக்களம், ஏனைய ஏதாவது அரச திணைக்களம், நியதிச்சட்ட நிறுவனம் ஆகியவற்றுக்கும் மற்றும் அரச ஊழியர்களுக்கும் அறிவுரைகளை வழங்கல் மற்றும் சிபாரிசுகளை செய்தல்.

9. பல அதிகார சபைகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்ற தற்போதைய கொள்கைகள், சட்டங்கள், சட்ட நடவடிக்கைகள், மற்றும் நடைமுறைகள் என்பவற்றை குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் ஊக்குவிப்பதையும் மற்றும் பாதுகாப்பதையும் பொருத்தமான ஏற்றுக் கொள்ளப்பட்டடுள்ள நியமங்களுக்கும் மற்றும் நடைமுறைகளுக்கும் அமைய உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு அவற்றை மீளாய்வு செய்தல், அந்த மீளாய்வை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான உகந்த கொள்கைகளையும், சட்டங்களையும், சட்ட நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளல், திருத்தியமைத்தல் மற்றும் அவற்றின் பிரயோகம் தொடர்பில் சிபாரிசு செய்தல்.
10. ஏதாவது ஒரு நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் அல்லது எவரேனும் நபர் ஒருவரின் வேண்டுகோளின் அடிப்படையில், சமகால அல்லது உடகனத்து சமகால கற்புல, செவிப்புல ரீதியில் சாட்சிகளை பெற்றுக் கொள்ளும் நிமித்தம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நெறிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பன தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.
11. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் வயது, பால்நிலை, சமயம், மொழி, கலாசாரம், நம்பிக்கை பழக்கவழக்கங்கள், இனம் அல்லது சமூகம் அல்லது ஊனமுற்றோர் அல்லது வேறு ஏதாவது காரணங்களினால் நேரிடக்கூடிய பாதிப்புகளின் விளைவாக குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் எதிராக எழுகின்ற தேவைகள் மற்றும் விஷேட குழுக்களில் உள்ளடங்கும் குற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கு எழுகின்ற விஷேட தேவைகள் என்பவற்றின் அடிப்படையில், இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை திணைக்கள ஊழியர்கள், அரச மருத்துவ ஊழியர்கள், நன்னடத்தை, சமூக சேவைகளுடன் தொடர்புடைய அரச ஊழியர்கள் ஆகியோர் அடங்கலாக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்துடன் தொடர்புடைய அரச ஊழியர்கள் ஆகியோர் உணர்ந்து செயல்படக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல்.
12. இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை ஊழியர்கள், அரச மருத்துவ ஊழியர்கள், மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் ஊழியர்கள் உள்ளடங்கலாக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் சம்பந்தப்படும் நீதிமன்றங்களினாலும்,

ஆணைக்குழுக்களினாலும், ஏனைய நியாயாதிக்க சபைகளினாலும் மற்றும் அரச ஊழியர்களினாலும், நியதிச்சட்ட சபைகளினாலும், குற்றத்தால் பாதிக்கப்பட்டோரதும் சாட்சியாளர்களினதும் உரிமைகளை பாதுகாப்பதற்கு பொருத்தமான நிருவாகம் சார்ந்த பொறிமுறைத் திட்டங்கள், ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நியமங்கள், சிறந்த நடைமுறைகள் என்பவற்றை பின்பற்றச் செய்தல் மற்றும் அவற்றை ஏற்புடையதாக்கிக் கொள்வதை ஊக்குவித்தல், மற்றும் சிபாரிசுகளை முன்வைத்தல்.

13. (i) குற்றங்கள் நிகழ்வதை குறைக்கக் கூடிய;

(ii) குறித்த குற்றங்களினால் பலியானவர்களுக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களை குறைக்கக் கூடிய அல்லது தவிர்க்கக் கூடிய;

(iii) குறித்தால் பலியானவர்களுக்கு பயனுள்ள விதத்தில் சிகிச்சை அளிக்கக் கூடிய, புனர்வாழ்வு அளிக்கக் கூடிய, ஆலோசனை வழங்கக் கூடிய, உதவி செய்யக் கூடிய, நஷ்டஈடுகளை செலுத்தக் கூடிய மற்றும் பாதுகாக்கக் கூடிய;

(iv) சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு அதிகார சபையின் அல்லது ஒரு நீதிமன்றத்தின் அல்லது வேறு ஒரு ஆணைக்குழுவின் மற்றும் வேறு ஒரு நியாயாதிக்க சபையின் முன்னிலையில் விசாரிக்கப்படும் ஒரு வழக்கு நடவடிக்கையின் போது, அச்சமின்றி சாட்சியாளர்கள் தமது கூற்றுக்களை வெளிப்படுத்த அல்லது சாட்சியமளிக்க உதவக் கூடிய ஒரு சூழலை உருவாக்கக் கூடிய;

(v) குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவக் கூடிய மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பளிக்கக் கூடிய,முறைகள் மற்றும் விதிமுறைகள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் அல்லது அவ்வாறு மேற்கொள்வதை ஊக்குவித்தல்;

14. குற்றங்கள் நிகழ்வதை குறைப்பதற்கும் மற்றும் குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு அந்தந்த அரச நிறுவனங்களுக்கு அந்த நிறுவனங்களின் மூலம் தேர்ந்தெடுக்கக் கூடிய சமூக, சுகாதார, கல்வி, பொருளாதார மற்றும் குற்றங்கள் தவிர்த்தல் ஆகிய அம்சங்கள் பற்றிய கொள்கைகளை சிபாரிசு செய்தல்;

15. குற்றவியலுக்கு எதிராக நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் முறைமையில் தண்டனைகளை விதிப்பதற்கு ஒரு மாற்றுவழியாக குற்றத்தால் பலியானவர்களை அவர்கள் முன்பிருந்த நிலைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை ஊக்குவித்தல், அத்தகைய நடவடிக்கைகளை அங்கீகரித்து செயற்படுத்துவது தொடர்பாக சிபாரிசு செய்தல்;

16. குற்றவியலுக்கு எதிராக நியாயத்தை பெற்றுக் கொடுப்பதை நிருவகிக்கும் ஒரு விடயமாகவும் மற்றும் குற்றவியலுக்கு எதிராக நியாயத்தை பெற்றுக் கொடுக்கும்

பொறிமுறையில் தண்டனைகளை விதிப்பதற்கு ஒரு மாற்றுவழியாக, குற்றத்தால் பலியானவர்கள் முன்பிருந்த நிலைக்கு வரும் வகையில் நியாயமான நடவடிக்கை எடுக்கப்படுவதை ஊக்குவித்தல், அத்தகைய ஊக்குவிப்பு நடவடிக்கைகளை அங்கீகரித்து செயற்படுத்துவது தொடர்பான சிபாரிசுகளை செய்தல்;

17. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கான ஒரு திட்டத்தை மேம்படுத்துதல், அத்தகைய திட்டங்களை பயன்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல்;
18. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான பிரிவை தாபித்து அதனை நிருவகித்து செல்லும் பொருட்டு பொருத்தமான முன்னோடி ஆலோசனைகளை வழங்குதல்;
19. (i) இந்த அதிகார சபை குறித்த சட்டத்தின் குறிக்கோள்களுக்கு அவை செல்லுபடியாகும் தன்மையை வழங்கியுள்ள விதம்;

    (ii) இந்த அதிகார சபையின் தொழிற்பாடுகளையும் மற்றும் கரும பணிகளையும் மேற்கொண்டு நிறைவேற்றல்; மற்றும்

    (iii) தேவையான கொள்கைகள் மற்றும் சட்டமறுசீரமைப்புகள் என்பன பற்றிய ஒரு அறிக்கையை வருடாந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்;
20. குறித்த சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு தேவையான மேலும் ஏதாவது தொழிற்பாடுகளையும் மற்றும் கரும பணிகளையும் நிறைவேற்றுதல் அல்லது அத்தகையவற்றை செயற்படுத்துதல்.

**குறித்த சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இந்த தேசிய அதிகார சபையின் அதிகாரத்தத்துவங்களையும் பொறுப்புப் பணிகளையும் பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.**

- **செயற்படுத்தும் பொறுப்புப்பணிகள்**

  குற்றத்தால் பாதிக்கப்பட்டோரினதும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் அதே நேரம் உரித்துக்களையும் இனங்காணுதல், அவற்றுக்கு மதிப்பளித்தல், ஊக்குவித்தல், அவற்றை பாதுகாத்தல் மற்றும் அவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

- **அரை நீதிமன்ற பொறுப்புப்பணிகள்**

  குற்றத்தால் பாதிக்கப்பட்டோரினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகள் மற்றும் உரித்துக்கள் மீறப்பட்டமை தொடர்பில் செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல், விளம்புதல், அத்தகைய மீறல்கள் தொடர்பில் உரிய அரச அதிகாரிகளுக்கும் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கும் கட்டளைகளை பிறப்பித்தல்.

**சேவை தொடர்பான பொறுப்புப்பணிகள்**

- குற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பையும் மற்றும் உதவியையும் வழங்குதல், நஷ்டஈடுகளை பெற்றுக் கொடுத்தல்.

- **ஒழுங்குறுத்துகை பொறுப்புப்பணிகள்**

  ஒழுங்குறுத்துகை சார்ந்த ஆலோசனைகளை வழங்குதல், மேற்பார்வை செய்தல், குற்றங்களை குறைக்கக் கூடிய முறைகளும் ஒழுங்குகளும் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், ஊக்குவித்தல், குற்றங்களை தடுக்கும் கொள்கைகள் தொடர்பான சிபாரிசுகளை முன்வைத்தல்.

# பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவு

2015 இன் 4 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மேலும் ஒரு விஷேட பிரிவாக இந்த தேசிய அதிகார சபையின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றின் அடிப்படையில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்ட "குற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சியாளர்களுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவு" என அழைக்கப்படும் ஒரு பொலிஸ் பிரிவும் காணப்படுகின்றது. குறித்த சட்டத்தின் 19 (2) ஆம் பிரிவின் கீழ் முகாமைத்துவ சபைக்கு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபரின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் இந்த பிரிவுக்கு பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து இந்தப் பிரிவு தனது பணிளை ஆரம்பித்துள்ளது.

இந்த தேசிய அதிகார சபை வெளியிடும் ஒழுங்குறுத்துகை ஆலோசனையை பின்பற்றி குறித்த "பிரிவை" நிருவகித்துச் செல்ல வேண்டும். குற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பை வழங்குதல், அவர்களுக்கும் மற்றும் அவர்களின் சொத்துக்களுக்கும் எதிராக விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள், பாதிப்பு என்பன தொடர்பான முறைப்பாடு, குற்றச்சாட்டு அல்லது தகவல் தொடர்பில் குறித்த "பிரிவு" மூலமாகவே பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் உதவியுடன் விசாரணை செய்வது குறித்த பிரிவின் பொறுப்பாகும். இவர்களுக்கு பாதுகாப்பையும் உதவியையும் வழங்கும் பொருட்டு இந்த அதிகார சபை வெளியிடுகின்ற வழிகாட்டல்களின் அடிப்படையில் வினைத் திறன் வாய்ந்த நடவடிக்கைகளை எடுக்க தேவையான உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும் நிமித்தம் அவசியமான நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

**அதிகார சபையினது முகாமைத்துவ சபை**[1]

ஜனாதிபதி அவர்கள் நியமித்த உறுப்பினர்கள் பின்வருமாறு:

1. தலைவர்: - ஜனாதிபதி சட்டத்தரணி திரு சுஹத கே. கமலத்
   ஓய்வுபெற்ற மன்றாடியார் நாயகம்
   சட்டமா அதிபரின் திணைக்களம்



2. திரு உதயகுமார அமரசிங்க
   குற்றவியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர்
   ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்



3. மருத்துவர் திரு அஜித் தென்னகோன்
   பிரதான நீதிமன்ற மருத்துவ அதிகாரி



4. மருத்துவர் திரு நீல் பெர்னாந்து
   விஷேட உளவியல் மருத்துவ அதிகாரி



5. சட்டத்தரணி திரு சமன் சேனாதீர



உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள்:

1. ஜனாதிபதி சட்டத்தரணி திரு சுசந்த பாளபட்டடிபெந்தி
   மேலதிக மன்றாடியார் நாயகம்
   சட்டமா அதிபரின் திணைக்களம்



2. திரு எல்.எஸ். பத்திநாயக்க
   சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர்
   குற்றங்கள், திட்டமிட்டு புரியும் குற்றங்கள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகங்களை தடுக்கும் பணியகம்
   போதைவஸ்துகள் மற்றும் தேர்தல்கள் குற்றப் பிரிவு, பொலிஸ் தலைமை அலுவலகம்



[1] 2020 நவம்பர் மாதம் முதல் நியமிக்கப்பட்டது.

3. சட்டத்தரனி திரு எச்.ஜி. ஹுசைன்[2]
ஆணையாளர்
மனித உரிமைகள் ஆணைக்குழு



4. திரு நிமல் கருணாசிறி[3]
ஆணையாளர்
மனித உரிமைகள் ஆணைக்குழு



5. சட்டத்தரனி திருமதி பியுமன்தி பீரிஸ்
மேலதிக செயலாளர் (சட்டம்)
நீதி அமைச்சு



6. திருமதி என்.எச்.எம்.டப்ளியூ.என். ஹேரத் குமாரி
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)
மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சு

6. திருமதி எம்.எஸ்.பி. சூரியப்பெரும
மேலதிக செயலாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) (பதில் கடமை)
பாதுகாப்பு அமைச்சு

7. அவதானிப்பாளர் (திறைசேரியின் பிரதிநிதி)
திருமதி எஸ்.ஏ.சி. குலதிலக்க
பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கைகள் திட்டமிடல் அமைச்சு

[2] 2020 நவம்பர் மாதத்திலிருந்து திசம்பர் மாதம் வரை
[3] 2020 திசம்பர் மாதம் முதல்

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம் - 2020**

1. திருமதி எஸ்.ஏ.சி. குலதிலக்க - தலைவர்
   பணிப்பாளர் நாயகம்
   முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்
   நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் திட்டமிடுகை அமைச்சு

2. திருமதி பியுமன்தி பீரிஸ் - உறுப்பினர்
   மேலதிக செயலாளர்
   பாதுகாப்பு அமைச்சர்

3. திருமதி எம்.எஸ்.பி. சூரியப்பெரும - உறுப்பினர்
   மேலதிக செயலாளர் (சட்டமும் ஒழுங்கும்) (பதில் கடமை)
   பாதுகாப்பு அமைச்சு

4. சட்டத்தரனி திரு சமன் சேனாதீர - உறுப்பினர்

5. திருமதி சுஜீவ பெரேரா - பிரதிநிதி
   தேசிய கணக்காய்வு அலுவலகம்

6. சம்பா பாளசூரிய - அவதானிப்பாளர்
   நீதி அமைச்சு

## பதவியணி - 2020

- **<u>சிரேஷ்ட முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் நாயகம் | - | திரு உதயகுமார அமரசிங்க |
| 2. | பணிப்பாளர் (சட்டம் மற்றும் சட்ட செயற்படுத்துகை) | - | செல்வி எஸ்.எஸ்.கே. கஸ்தூரிஆராச்சி |
| 3. | பணிப்பாளர் (கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்) | - | திரு ஐ. சிறிவர்த்தன |
| 4. | பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்) | - | திரு டப்ளியூ.ஜி.என். பெர்னாந்து |
| 5. | பணிப்பாளர் (நிதி) | - | திருமதி ஜி.டீ.ஆர். பெரேரா |
| 6. | உதவிப் பணிப்பாளர் (நிதி) | - | திருமதி ஆர்.ஏ.டீ. சமிலா திஸானி |
| 7. | உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | - | திருமதி பி.என்.யூ. பட்டிஆராச்சி |
| 8. | உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | - | திரு டப்ளியூ.எம். அஜித் பண்டார |
| 9. | முகாமைத்துவ சபை செயலாளர் | - | திருமதி பி.ஜி.எம்.எஸ்.ஆர்.டப்ளியூ. குணவர்த்தன |

- ***<u>மூன்றாம் நிலை</u>***

| | | | |
|---|---|---|---|
| 1. | சட்ட உத்தியோகத்தர் | - | எஸ்.எஸ். திக்கும்புர |
| | | - | ரீ.எம்.பி.டீ. தென்னகோன் |
| 2. | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் | - | எம்.பி. ஜயவர்த்தன |
| 3. | விசாரணை உத்தியோகத்தர்கள் | - | எச்.எம்.எஸ்.பி. ஹேரத் |
| | | | எச்.எஸ். விஜேனாயக்க |
| | | | டப்ளியூ.பி.கே. விக்ரமசிங்க |
| | | | ரீ.ஏ.பீ.சி. ஜயசேக்கர |
| | | | எல்.சி.கே. லியனகே |

4. தகவல் உத்தியோகத்தர் - எம்.ஏ.எஸ்.ரீ. முணசிங்க

5. மொழிபெயர்ப்பாளர் - ரீ.ஜே. குருகமகே

- **<u>இரண்டாம் நிலை ஆளணி</u>**

**முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில் நுட்பம் சாராத) - 08**

1. திரு சஹன் ஹர்ஷன அத்துகோரள
2. திருமதி எஸ்.என்.எச். நதீஷா மதுமாலி நாணயக்கார
3. செல்வி பி.ஏ. திலினி தர்ஷிகா பெரேரா
4. திருமதி எம்.பி. சவித்ரா துலாஷனி குணசேக்கர
5. செல்வி ஐ.ஏ. ஹர்ஷனீ இலேபெரும
6. திரு தர்ஷன் ரஜீவ் ஜயமணி

- **<u>ஆரம்ப நிலை ஆளணி</u>**

**சாரதி**

**சாரதிகளின் எண்ணிக்கை - 06**

1. திரு யூ.டீ. விமங்க பெத்தும்
2. திரு டீ.எம். சம்பத் நிஷாந்த பண்டார
3. திரு ஏ. பிரபாத் நிஷாந்த
4. திரு எஸ்.பீ. பாக்கிய மதுசங்க
5. திரு கே. கசுன் மதுஷர்ன விமுக்தி
6. திரு எஸ். காமினி விஜேகுமார

**அலுவலக பணியாட்கள்**

**அலுவலக பணியாட்களின் எண்ணிக்கை - 05**

1. செல்வி டப்ளியூ. நதீஷானி பெர்னாந்து
2. திருமதி ஜே.ஜே. சாமலி மல்காந்தி விஜேவிக்ரம
3. திரு டப்ளியூ.எம். விமல புத்திக்க
4. திரு ஏ.ஏ. பிரதீப் குமார பெரேரா
5. திரு கசுன் மதுசங்க யக்குபிட்டிய


## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

## 2020/12/31 ஆம் திகதிற்கான ஆளணி பற்றிய சுருக்கமான விபரம்

## அட்டவணை 01

| வகுதி | சம்பளக் குறியீடு | மு.சே.தி. அனுமதித்துள்ள ஆளணி | தற்போதுள்ள ஆளணி எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| ***சிரேஷ்ட நிலை*** | | | | |
| பணிப்பாளர் நாயகம் (பதில் கடமை) | HM 2-3 | 1 | 1 | 0 |
| பணிப்பாளர் | HM 1-3 | 6 | 4 | 2 |
| உதவிப் பணிப்பாளர் | MM 1-3 | 3 | 3 | 0 |
| முகாமைத்துவ சபை செயலாளர் | MM 1-3 | 1 | 1 | 0 |
| ***மூன்றாம் நிலை*** | | | | |
| சட்ட உத்தியோகத்தர் | JM 1-1 | 3 | 2 | 1 |
| உள்ளகக் கணக்காய்வு உத்தியோக்கர் | JM 1-1 | 1 | 1 | 0 |
| விசாரணை உத்தியோகத்தர் | MA 4 | 6 | 5 | 1 |
| அரவணைப்பு உத்தியோகத்தர் | MA 4 | 10 | 0 | 10 |
| தொடர்பாடல் உத்தியோகத்தர் | MA 4 | 1 | 0 | 1 |
| தகவல் உத்தியோகத்தர் | MA 4 | 1 | 1 | 0 |
| மொழிபெயர்ப்பாளர் | MA 4 | 1 | 1 | 0 |
| ***இரண்டாம் நிலை*** | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்பம் சாராத) | MA 1-1 | 10 | 6 | 4 |
| ***ஆரம்ப நிலை*** | | | | |
| சாரதி | PL 3 | 6 | 6 | 0 |
| அலுவலகப் பணியாள் | PL 1 | 6 | 5 | 1 |
| **கூட்டுத் தொகை** | | **56** | **36** | **20** |

# குற்றத்தால் பாதிக்கப்பட்டோரையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பற்றிய விபரம்



# செயலாற்றுகை

## செயலாற்றுகை அறிக்கை - 2020 சனவரி மாதம் முதல் திசம்பர் மாதம் வரை

**கவனிக்க வேண்டியது: நாட்டில் நிலவுகின்ற கொவிட்-19 தொற்றுநோய் நிலவரத்தை அடுத்து 2020 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு ஏற்ப எதிர்பார்த்த கருமப் பணிகளை அந்தந்த காலப் பகுதியில் நிறைவெற்ற முடியவில்லை. அது போல் இந்தத் தேசிய அதிகார சபைக்கு 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை முகாமைத்துவ சபை நியமிக்கப்படாததால் அது செயலாற்றுகைக்கு பாதிப்பாக அமைந்தது.**


| | |
|---|---|
| நிருவாக மற்றும் முகாமைத்துவ பிரிவு | 35-38 |
| சட்டம் மற்றும் அமுலாக்கல் பிரிவு | 39-47 |
| பாதுகாப்பு பிரிவு | 48-51 |
| கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவு | 52-56 |
| நிதிப் பிரிவு | 57-58 |

# நிருவாக மற்றும் முகாமைத்துவ பிரிவு

**01. உள்நாட்டு/வெளிநாட்டு பயிற்சிகள்**

குறித்த காலப் பகுதியினுள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் எந்த ஒரு உத்தியோத்தரும் பங்குபற்றவில்லை. உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஊழியர்களை அனுப்புவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊழியர்கள் பற்றிய விபரம் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | நடத்திய நிறுவனம் | பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் | காலப் பகுதி |
|---|---|---|---|
| கண்காணிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (Supervisor Development Programme) | பட்டய தொழிலாளர் முகாமைத்துவ நிறுவகம் (CIPM) | சுரேனி திக்கும்புர<br>பிரபாஸி தினெல்கா | 2020.01.21, 22, 23 |
| செயல் திட்டத்தையும் மற்றும் பெறுகைத் திட்டத்தையும் தயாரித்தல் (How to Prepare Action Plan & Procurement plan) | திறன்கள் அபிவிருத்தி நிதியம் (SDFL) | டப்ளியூ.எம்.ஏ. பண்டார<br>பி.என்.யூ. பட்டிஆராச்சி | 2020.02.24 முதல் 26 |
| விழா முகாமைத்துவம் பற்றிய வேலையரங்கு (Workshop on Event Management) | திறன்கள் அபிவிருத்தி நிதியம் (SDFL) | தத்மினி ஜயங்கனா<br>தர்ஷன் ரஜீவ் ஜயமணி | 2020.09.17, 18 |
| அமைச்சரவைப் பத்திரங்களை தயாரித்தல் (Preparation of Cabinet Paper) | திறன்கள் அபிவிருத்தி நிதியம் (SDFL) | டப்ளியூ.எம்.ஏ. பண்டார<br>சமிலா திஷானி | 2020.09.21 |
| தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (Leadership Development Programme) | திறன்கள் அபிவிருத்தி நிதியம் (SDFL) | தத்மினி ஜயங்கனா | 2020.09.28, 29 |
| களஞ்சியக் கட்டுப்பாடு மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் (Inventory Control And Inventory Management) | திறன்கள் அபிவிருத்தி நிதியம் (SDFL) | ஹர்ஷனி இலேபெரும<br>நதீஷா மதுமாலி | 2020.09.24, 25 |

2021 ஆம் ஆண்டிற்கான பதவியணிப் பயற்சித் தேவைகளை இனங்கண்டு ஏற்கெனவே பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆட்சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்த்த புதிய ஆளணிக்கு அறிமுகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் தயாரிக்கப் பட்டுள்ளன.

**02. பெறுகை (பெறுகைத் திட்டத்திற்கு இணங்க)**

நாட்டினுள் நிலவுகின்ற நிலவரத்தின் காரணமாக, திட்டமிடப்பட்டிருந்த விதத்தில் எதிர்பார்த்த கொள்வனவுகளை மேற்கொள்ள முடியவில்லை. 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள கரும பணிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப் பட்டுள்ளன.

- ✓ கட்புல செவிப்புல ஊடகத்தின் ஊடாக சாட்சியளிப்பது தொடர்பாக பெறுகை விடயங்கள் ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- ✓ வலையமைப்பு முகாமைத்துவ முறைமை (Server) தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- ✓ அலுவலக தளபாடங்கள்/பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- ✓ முகாமைத்துவ சபை கூட்டங்கள் மண்டபத்தை அண்மித்த பகுதி பிரித்து வேறாக்கப்பட்டது.
- ✓ நிறுவன இணையத்தளத்தை தாபிப்பதற்கு கேள்வி மனுக்கள் அழைக்கப்பட்டு சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ✓ ஏனைய பெறுகைகளில் அதிகமானவை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


**03. மனித வளங்கள் முகாமைத்துவம்**

- ✓ முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் ஒரு சட்ட உத்தியோகத்தர் பதவி அனுமதித்துக் கொள்ளப்பட்டது.
- ✓ ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் (அரவணைப்பு) மற்றும் பணிப்பாளர் (உதவு சேவைகள்) ஆகிய இரண்டு பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அனுமதித்துக் கொள்ளப்பட்டது.
- ✓ நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2020.12.06 ஆம் திகதி செய்திப் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டது. கிடைத்த விண்ணப்பப் படிவங்கள் ஏற்கெனவே தரம் பிரிக்கப்பட்டு (Short List) இறுதிக் கட்டத்திலுள்ளன.
- ✓ இந்த தேசிய அதிகார சபைக்கு ஒரு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை (மனித வளங்கள் தகவல் முறைமை) அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த தேசிய அதிகார சபையின் ஆளணிக்கு 2020.12.31 ஆம் திகதிற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ள ஊழியர்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சேவை வகுதி | மு.சே.தி. அனுமதித்துள்ள ஆளணி | தற்பொழுதுள்ள ஆளணி |
|---|---|---|
| **<u>சிரேஷ்ட நிலை</u>**<br>பணிப்பாளர் நாயகம்<br>பணிப்பாளர்<br>உதவிப் பணிப்பாளர்<br>முகாமைத்துவ சபையின் செயலாளர் | 11 | 9 |
| **<u>மூன்றாம் நிலை</u>**<br>சட்ட உத்தியோகத்தர் | 23 | 10 |

| | | |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்<br>விசாரணை உத்தியோகத்தர்<br>அரவணைப்பு உத்தியோகத்தர்<br>தொடர்பாடல் உத்தியோகத்தர்<br>தகவல் உத்தியோகத்தர்<br>மொழிபெயர்ப்பாளர் | | |
| <u>**இரண்டாம் நிலை**</u><br>முகாமைத்துவ உதவியாளர்<br>(தொழில்நுட்பம் சாராத) | 10 | 6 |
| <u>**ஆரம்ப நிலை**</u><br>சாரதி<br>அலுவலக உதவியாள் | 12 | 11 |
| **கூட்டுத் தொகை** | **56** | **36** |




**முகாமைத்துவ சபைக் கூட்டங்களும் மற்றும் ஏனைய கூட்டங்களும்**

- 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முகாமைத்துவ சபை கூட்டம் நடத்தப்பட்டதால் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் 2 முகாமைத்துவ சபைக் கூட்டங்களை மாத்திரம் நடத்த முடிந்தது.
- இந்த தேசிய அதிகார சபையின் பணிப்பாளர்களினது பங்குபற்றலில் 10 சிரேஷ்ட முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

# சட்டம் மற்றும் அமுலாக்கல் பிரிவு

2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவுக்கு பொது மக்களிடமிருந்தும் மற்றும் அரச நிறுவனங்களிடமிருந்தும் கிடைத்த வேண்டுகோள்களினதும் மற்றும் முறைப்பாடுகளினதும் எண்ணிக்கை 157 ஆகும். 2019 ஆம் ஆண்டு முடிவடையும் வரை இந்தத் தேசிய அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கு இடையில் 2020 ஆம் ஆண்டு ஆரம்ப பகுதியளவிலும் நிறைவு பெறாதிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 221 ஆகும். அதன்படி 2020 ஆம் ஆண்டு இந்த அதிகார சபையினால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 368 ஆகும். எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள் தொடர்பாக இந்த அதிகார சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி மேற்குறித்த சகல வேண்டுகோள்களினதும் தற்போதைய நிலை பின்வருமாறு காணப்படும்.

ஒரு கடிதத்தில் பல வேண்டுகோள்கள் உள்ளடக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணக் கூடியதாக இருந்தன. அத்தகைய உரிய ஆவணங்கள் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வேண்டுகோள்களுக்கு இணங்க கீழ்காணும் விதத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் இந்த அதிகார சபைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 157
- இந்த அதிகார சபையின் சட்டப் பிரிவினால் விசாரணை செய்ய வேண்டியிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 54
- சட்டப் பிரிவினால் குற்றம் விசாரிக்கப்படும் முகமாக பொலிஸ் பிரிவுக்கு அல்லது ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு குறிப்பீடு செய்யப்பட்டிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 34
- சட்டப் பிரிவினால் நீதிமன்றத்தின் அரவணைப்புப் பிரிவுக்கு குறிப்பீடு செய்யப்பட்டிருந்த கோவைகளின் எண்ணிக்கை - 53 (இந்த முறைப்பாடுகளுக்கு இடையில் ஒரு முறைப்பாடு அரவணைப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டிருப்பது 2021 ஆம் ஆண்டு உடனகத்து பின்னராகும்)
- இந்த அதிகார சபையிலிருந்து பல வகையான உதவிகளை பெற்றுக் கொள்ளும் முகமாக விண்ணப்பிக்கப்பட்டதன் பின்னர் உதவி வழங்கப்பட்டு வருகின்ற மற்றும் உதவி வழங்கப்பட்டு நிறைவடைந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 11

- இந்த அதிகார சபையின் விடயப் பரப்பில் வராத முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 48
- இந்த முறைப்பாடுகளுக்கு இடையில் சட்டப் பிரிவினால் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 44
- எவ்வாறாயினும் குறித்த 157 முறைப்பாடுகளினுள் இந்த அதிகார சபையின் விடயப் பரப்பில் வருகின்ற 152 வேண்டுகோள்களும் மற்றும் இந்த அதிகார சபையின் விடயப் பரப்பில் வராத 48 முறைப்பாடுகளும் அடங்குகின்றன. முறைப்பாடுகளின் தன்மைக்கு ஏற்ப இந்த முறைப்பாடுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் குறித்த முறைப்பாடுகளில் குறிப்பிடப் பட்டுள்ள வேண்டுகோள்களுக்கு ஏற்ப அவை வகைப்படுத்தப்படும் போது இந்த அதிகார சபையினால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் எண்ணிக்கை 200 ஆகும். (53+34+11+54+48).

| **வேண்டுகோள்களின் தன்மை** | **வேண்டுகோள்களின் எண்ணிக்கை** |
|---|---|
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் | 38 |
| குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் | 5 |
| பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள் | 20 |
| உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள் | 10 |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் | 3 |
| குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 20 |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் மற்றும் உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 5 |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் உதவியை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | 7 |
| உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் குறித்த சட்டத்தின் 8,9 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் மற்றும் உதவியை | 1 |

| | |
|---|---|
| நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் மற்றும் பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களும் | |
| ஏனைய வேண்டுகோள்கள் | 48 |
| **கூட்டுத் தொகை** | **157** |

- 2020 ஆம் ஆண்டு இந்த அதிகார சபைக்கு கிடைத்திருந்த முறைப்பாடுகளில் முழுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 44 ஆகும். ஆயினும் 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் இந்த அதிகார சபையினால் முழுமையாக நிறைவு செய்யப் பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை பின்வருமாறு காணப்படும்.

| **ஆண்டு** | **கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **சட்டப் பிரிவினால் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 2016 | 12 | 8 |
| 2017 | 49 | 38 |
| 2018 | 86 | 51 |
| 2019 | 252 | 125 |
| 2020 | 157 | 44 |
| | ------- | ------- |
| | 556 | 266 |
| | ==== | ==== |

எனினும், ஏனை முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில வேண்டுகோள்களும் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த முறைப்பாடுகளுடன் சம்பந்தமான ஏனைய வேண்டுகோள்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேலும் எடுக்கப்பட்டு வருகின்றன. நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றத்தால் பலியானவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளை கோவைப்படுத்துவதன் மூலம் நீதிமன்றத்தின் ஊடாக குற்றத்தால் பலியானவர்களுக்கு நஷ்டஈடுகளை பெற்றுக் கொடுப்பதற்கு உதவுதல், நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுகின்ற வழக்குகளின் சாட்சிகளை சமகால கட்புல செவிப்புல தொடர்பு சாதனங்களின் மூலம் தூர இடங்களிலிருந்து வழிநடத்துவதற்கு உதவுதல் மற்றும் இந்த அதிகார சபைக்கு எதிராக பல நபர்களினால் தாக்கல்

செய்யப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகளில் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் என்பன இவற்றில் அடங்குகின்றன.

**2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விசாரணை செய்து நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய விபரங்கள் கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளன.**

**உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள்**

| தொடர் இலக்கம் | குறிப்பு இலக்கம் | கோவை மூடப்பட்டமைக்கான காரணங்கள் |
|---|---|---|
| 01 | VWPA/L&LE/RE/07/20 | நடுத்தீர்ப்பு சபையினால் பிணக்கு தீர்த்து வைக்கப்பட்டது. |
| 02 | VWPA/L&LE/RE/15/20 | குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராமை. |
| 03 | VWPA/L&LE/RE/22/20 | எந்த ஒரு அச்சுறுத்தலும் இல்லை என தெரிய வந்தமை. |
| 04 | VWPA/L&LE/RE/23/20 | சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளமை. ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை. |
| 05 | VWPA/L&LE/RE/34/20 | எதிராளி கைதுசெய்யப்பட்டுள்ளமை. B / 2304/ 2020 ஆம் இலக்கத்தின் கீழ் குருனாகல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை. |
| 06 | VWPA/L&LE/RE/37/20 | B 523/ 10 ஆம் இலக்கத்தின் கீழ் ஹங்குரங்கெத்த பொலிஸ் நிலையத்தினால் வலப்பண நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை. |
| 07 | VWPA/L&LE/RE/16/20 | ஹஷலக்க பொலிஸ் நிலைய அறிக்கையின் பிரகாரம் முறைப்பாட்டாளரை கண்டுபிடிக்க முடியாதுள்ளமை. அந்த நபருக்கு நிரந்தர முகவரி கிடையாமை. |

**பாதுகாப்பை நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள்**

| தொடர் இலக்கம் | குறிப்பு இலக்கம் | கோவை மூடப்பட்டமைக்கான காரணங்கள் |
|---|---|---|
| 08 | VWPA/L&LE/P/21/20 | முறைப்பாட்டாளர் விடுத்த வேண்டுகோளின் பேரில் மூடப்பட்டது. |

**குற்றவியல் தொடர்பான குற்றங்கள் மாத்திரம்**

| தொடர் இலக்கம் | குறிப்பு இலக்கம் | கோவை மூடப்பட்டமைக்கான காரணங்கள் |
|---|---|---|
| 09 | VWPA/L&LE/O /09/20 | பொலிஸ் அறிக்கையின் பிரகாரம் எந்த ஒரு அச்சுறுத்தலும் காணப்படுவதாக இல்லை என தெரிய வந்துள்ளது. |
| 10 | VWPA/L&LE/O /39/20 | இந்த அதிகார சபைக்கு முறைப்பாட்டாளரை தொடர்புபடுத்த முடியாமல் போனது. |

குற்றம் தொடர்பான முறைப்பாடுகள், உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்பட்டமை தோடர்பான முறைப்பாடுகள் மற்றும் உதவியையும் பாதுகாப்பையும் நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள்.

| **தொடர் இலக்கம்** | **குறிப்பு இலக்கம்** | **கோவை மூடப்பட்டமைக்கான காரணங்கள்** |
|---|---|---|
| 11 | VWPA/L&LE/O/01/20<br>VWPA/L&LE/P/02/20<br>VWPA/L&LE/RE/04/20 | இந்த அதிகார சபையினால் தலையீடு செய்ய முடியாது. |
| 12 | VWPA/L&LE/O /10/20<br>VWPA/L&LE/P/16/20<br>VWPA/L&LE/RE/12/20 | நாரம்மல பொலிஸ் நிலையத்தினால் 28293/17 ஆம் இலக்கத்தின் கீழ் நாரம்மல நீதிவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

குற்றம் தொடர்பான முறைப்பாடுகள், உதவியையும் மற்றும் பாதுகாப்பையும் நாடி விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள்

| **தொடர் இலக்கம்** | **குறிப்பு இலக்கம்** | **கோவை மூடப்பட்டமைக்கான காரணங்கள்** |
|---|---|---|
| 13 | VWPA/L&LE/O /03/20<br>VWPA/L&LE/P/04/20<br>VWPA/L&LE/A/04/20 | நாரம்மல பொலிஸ் நிலைய அறிக்கையின் பிரகாரம், 2015 இன் 4 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் எந்த விதமான குற்றமும் புரியப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. |
| 14 | VWPA/L&LE/O /01/20<br>VWPA/L&LE/P/02/20<br>VWPA/L&LE/RE/04/20 | பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டாரினால் எடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |


## பிற வேண்டுகேள்கள்

| தொடர் இலக்கம் | குறிப்பு இலக்கம் | கோவைகளை மூடுவதற்கான காரணங்கள் |
|---|---|---|
| 15 | VWPA/L&LE/O.COM/01/20 | கம்பஹா நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதால் இந்த அதிகார சபையினால் தலையீடு செய்ய முடியாது. |
| 16 | VWPA/L&LE/O.COM/04/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 17 | VWPA/L&LE/O.COM/03/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 18 | VWPA/L&LE/O.COM/06/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 19 | VWPA/L&LE/O.COM/08/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 20 | VWPA/L&LE/O.COM/10/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 21 | VWPA/L&LE/O.COM/12/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 22 | VWPA/L&LE/O.COM/13/20 | எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. |
| 23 | VWPA/L&LE/O.COM/16/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 24 | VWPA/L&LE/O.COM/17/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 25 | VWPA/L&LE/O.COM/15/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 26 | VWPA/L&LE/O.COM/14/20 | 2015 இன் 4 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் மேலதிக நடவடிக்கையை எடுக்க முடியாது. |
| 27 | VWPA/L&LE/O.COM/18/20 | முறைப்பாட்டுத் தரப்பு எதிராளி என்பதால் இந்த அதிகார சபையினால் பொலிஸ் விசாரணைகளில் தலையீடு செய்ய முடியாது. முறைப்பாடு விசாரணை செய்யப்படும் போது எதிராளி தனது சாட்சியத்தை வாய்மொழியாக முன்வைக்கலாம். |
| 28 | VWPA/L&LE/O.COM/19/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 29 | VWPA/L&LE/O.COM/20/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 30 | VWPA/L&LE/O.COM/21/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 31 | VWPA/L&LE/O.COM/22/20 | தற்பொழுது விசாரணை செய்யப்பட்டு வருகின்ற ஒரு வழக்கு. தலையீடு செய்ய முடியாது. |

| | | |
|---|---|---|
| 32 | VWPA/L&LE/O.COM/23/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 33 | VWPA/L&LE/O.COM/26/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 34 | VWPA/L&LE/O.COM/30/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 35 | VWPA/L&LE/O.COM/31/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 36 | VWPA/L&LE/O.COM/34/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 37 | VWPA/L&LE/O.COM/35/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 38 | VWPA/L&LE/O.COM/36/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 39 | VWPA/L&LE/O.COM/11/20 | பொலிஸினால் உரிமைகள் மீறப்படவில்லை. பொலிஸினால் செய்யப்பட்டிருப்பது அழைப்பாணையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தமையாகும். |
| 40 | VWPA/L&LE/O.COM/28/20 | குறித்த வேண்டுகோள் எமது சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 41 | VWPA/L&LE/O.COM/29/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 42 | VWPA/L&LE/O.COM/33/20 | குறித்த வேண்டுகோள் குறித்த சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒரு வேண்டுகோள். |
| 43 | VWPA/L&LE/O.COM/38/20 | இந்த முறைப்பாடு முதன்னிலை வழக்குகள் நடைமுறை விதி சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு முறைப்பாடு என்பதால் இந்த அதிகார சபையினால் இதன் நிமித்தம் தலையீடு செய்ய முடியாது. |
| 44 | VWPA/L&LE/O.COM/41/20 | குறித்த முறைப்பாடு 2015 இன் 4 ஆம் இலக்க சட்டத்தின் விடயப் பரப்பில் வராத ஒ ருமுறைப்பாடு. |

- 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் திசம்பர் மாதம் வரை இந்த அதிகார சபையுடன் உடனடியாக தொடர்பு கொள்ளக் கூடிய 1985 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த அழைப்புகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாதம் | கிடைத்த தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| சனவரி | 119 |
| பெப்ருவரி | 105 |
| மார்ச் | 40 |
| ஏப்ரல் | 0 |
| மே | 0 |
| யூன் | 27 |
| யூலை | 145 |
| ஆகஸ்ட் | 159 |
| செப்டம்பர் | 184 |
| ஒற்றோபர் | 30 |
| நவம்பர் | 3 |
| திசம்பர் | 2 |
| **கூட்டுத் தொகை** | **814** |



48

# பாதுகாப்பு பிரிவு

2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவின் மூலம் பாதுகாப்பு பிரிவுக்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வேண்டுகோள்களினதும் மற்றும் முறைப்பாடுகளினதும் எண்ணிக்கை 52 ஆகும். அதே போல் இந்த அதிகார சபைக்கு 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கிடைத்துள்ள பாதுகாப்பு தொடர்பான வேண்டுகோள்களுக்கு மத்தியில் நிறைவு பெறாதுள்ள முறைப்பாடுகளுக்கும் பாதுகாப்புப் பிரிவினால் 2020 ஆம் ஆண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக பாதுகாப்பு பிரிவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு காணப்படும்.

| ஆண்டு | கிடைத்த முறைப் பாடுகள் எண்ணிக்கை | விசாரணை செய்யப் பட்டு வருகின்ற முறைப் பாடுகளின் எண்ணிக் கை | பாதுகாப்பு வழங்கப் பட்டு வருகின்ற மற்றும் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ள முறைப்பாடுகள் எண்ணிக்கை | | விசாரணை செய்யப்பட்டு நிறைவு செய்யப் பட்டுள்ள முறைப்பாடுகள் எண்ணிக்கை | | மூடப் பட்டுள்ள முறைப் பாடுகள் எண்ணிக்கை | | சட்டமா அதிபரின் அறிவுரை களின் நிமித்தம் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள முறைப் பாடுகள் எண்ணிக் கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பாதுகாப்பு வழங்கப் பட்டு வருகின்ற முறைப் பாடுகள் | பாது காப்பு வழங்கப் பட்டுள்ள முறைப் பாடுகள் | பாதுகாப்பு வழங்கப் பட்டு நிறைவு செய்யப் பட்டுள்ள முறைப் பாடுகள் | விசார ணை செய்யப் பட்டு நிறைவு செய்யப் பட்டுள்ள முறைப் பாடுகள் | பாதுகாப்பு வழங்கப் பட்டு மூடப் பட்டுள்ள முறைப் பாடுகள் | மூடப் பபட்டுள்ள முறைப் பாடுகள் | |
| 2016 | 08 | 0 | - | 01 | 01 | 04 | - | 01 | 01 |
| 2017 | 15 | 0 | 01 | - | 01 | 11 | - | 02 | - |
| 2018 | 27 | 04 | 07 | - | 01 | 12 | 02 | 01 | - |
| 2019 | 91 | 25 | 25 | 02 | 01 | 32 | 01 | 05 | - |
| 2020 | 52 | 36 | 14 | - | - | 02 | - | - | - |
| கூட்டுத் தொகை | 193 | 65 | 47 | 03 | 04 | 61 | 03 | 09 | 01 |

மேற்குறித்த முறைப்பாடுகளில் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற முறைப்பாடுகள் தொடர்பான அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கும் வரை இடைக்காலப் பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2015 இன் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் 24 ஆம் பிரிவின்

பிரகாரம் நீதிமன்றங்களும் மற்றும் ஆணைக்குழுவும் விடுத்த கட்டளைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது பாதுகாப்பு பிரிவினாலாகும். 2020 ஆம் ஆண்டிற்கு ஆணைக்குழுவிலிருந்து 38 கட்டளைகளும் மற்றும் நீதிமன்றங்களிலிருந்து 5 கட்டளைகளும் இந்த அதிகார சபைக்கு கிடைத்துள்ளன. அதே போல் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கிடைத்துள்ள நீதிமன்றங்களிலிருந்தும் மற்றும் ஆணைக்குழுவில் இருந்தும் கிடைத்த கட்டளைகள் தொடர்பான நிறைவு பெறாத கோவைகள் தொடர்பாக 2020 ஆம் ஆண்டிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்தக் கட்டளைகள் தொடர்பாக பாதுகாப்பு பிரிவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | ஆணைக்குழுவிலிருந்து கிடைத்த கட்டளைகளின் எண்ணிக்கை | நீதிமன்றங்களிலிருந்து கிடைத்த கட்டளைகளின் எண்ணிக்கை | பாதுகாப்பை வழங்குமாறு விடுக்கப்பட்டிருந்த கட்டளைகளின் எண்ணிக்கை | அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதற்காக குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மற்றும் இடைக்கால பாதுகாப்பை வழங்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ள கட்டளைகளின் எண்ணிக்கை | அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதற்காக பொலிஸ் பிரிவுக்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கட்டளைகளின் எண்ணிக்கை | அச்சுறுத்தல்களை மதிப்பிடும் அறிக்கைகளின் பிரகாரம் அச்சுறுத்தல்கள் இருப்பதால் பாதுகாப்பை வழங்குமாறு விடுக்கப்பட்டிருந்த கட்டளைகளின் எண்ணிக்கை | பாதுகாப்பை வழங்கி கோவைகளை மூடுமாறு விடுக்கப்பட்டிருந்த கட்டளைகளின் எண்ணிக்கை | கோவைகளை மூடுமாறு விடுக்கப்பட்டிருந்த கட்டளைகளின் எண்ணிக்கை | கோவைகள் மூடப்பட்டதன் பின்னர் மீண்டும் திறக்குமாறு விடுக்கப்பட்டிருந்த கட்டளைகளின் எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் மீண்டும் திறக்குமாறு விடுக்கப்பட்டிருந்த கட்டளைகளின் எண்ணிக்கை | பாதுகாப்பை வழங்கி நிறைவு செய்யுமாறு விடுக்கப்பட்டிருந்த கட்டளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2016 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2017 | 01 | - | - | - | - | - | - | - | - | 01 | - |
| 2018 | 02 | - | - | - | - | - | - | - | 01 | - | 01 |
| 2019 | 10 | 01 | 05 | - | - | - | 05 | - | - | - | 01 |
| 2020 | 38 | 05 | 09 | 17 | 02 | 02 | 02 | 11 | - | - | - |
| Total | 51 | 06 | 14 | 17 | 02 | 02 | 07 | 11 | 01 | 01 | 02 |

- மேலும் 2015 இன் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற அல்லது அறை நீதிமன்ற நடவடிக்கையில் பங்குபற்றும் முகமாக நீதிமன்றத்திற்கு செல்லும் போது உணவு, தங்குமிட வசதிகள் மற்றும் போக்குவரத்து முதலிய தேவைகளின் நிமித்தம் செலவாகும் செலவுகளை இந்த அதிகார சபையின் நிதியிலிருந்து செலுத்துமாறு

நீதிமன்றங்களிலிருந்து வேண்டுகோள்கள் கிடைக்கும் போது ஆகக்கூடியது ஐயாயிரம் ரூபாவுக்கு அமைய அந்த செலவுகளை செலுத்துவதற்கு, 2019.11.15 ஆம் திகதி நடைபெற்ற இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய இரண்டு வேண்டுகோள்கள் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கிடைத்தன. அந்த வேண்டுகோள்களின் நிமித்தம் நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

# கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவு

2015 இன் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் ((13) ஆம் பிரிவு) குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் செயற்பணியையும் மற்றும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்ளும் பொருட்டு குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் பற்றி அவர்களையும் மற்றும் மாணவர்கள் அடங்கலாக பொது மக்களையும் விழிப்பூட்டுவதற்கான ஒரு வேலைத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அதன் நிமித்தம் தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக விஷேடமான உதவிகளை வழங்கல் என்பன 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பின்வருமாறு நிகழ்ந்தன.

**1. விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்**

- 86 ஊடகவியலாளர்களினதும் மற்றும் ஊடக நிறுவனங்களின் தலைவர்களினதும் பங்குபற்றலில் குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டம் பற்றி விழிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 9 ஆம் திகதி பத்தரமுல்ல Waters' Edge ஹோட்டலில் நடத்தப்பட்டது. இதன் நிமித்தம் UNDP நிறுவனம் நிதி உதவியை வழங்கியது. ஒழுங்கமைப்பு விடயங்களை எமது அதிகார சபை, ஊடக அமைச்சுடன் இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை முழு நாளும் இந்த விடயம் பற்றி நிபுணர்களின் வளப் பங்களிப்புடன் மிகவும் வெற்றிகரமாக செய்து நிறைவு செய்தது.
- சமூக சீர்திருத்தங்கள், சிறுவர்களின் உரிமைகள் ஊக்குவிப்பு பற்றிய நன்னடத்தை சம்பந்தமான உத்தியோகத்தர்களையும் மற்றும் மேல் மாகாண குற்றம், சிறு முறைப்பாடுகள் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் பொலிஸ் பிரிவு பொலிஸ் அதிகாரிகளையும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு எதிர்பார்த்தாலும் கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் இந்த அதிகார சபையின் அன்றைய முகாமைத்துவ சபை நியமிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் அவற்றை நடத்த முடியவில்லை.
- 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த அதிகார சபைக்கு ஒரு முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டது. இந்த அதிகார சபையின் தொழிற்பாடுகளை இலகுவாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 19 ஆம் திகதி ஒரு தொழில் நுட்ப வேலையரங்கு முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களினதும் மற்றும் தொழில் நுட்ப பிரிவின் பணிப்பாளர்களினதும் மற்றும் பொலிஸ் பாதுகாப்பு பிரிவின் உயர் அதிகாரிகளினதும் பங்குப்றறலில் நடத்தப்பட்டது. இதன் நிமித்தம் இந்த அதிகார சபையின் தலைவர் மற்றும் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள்

மற்றும் UNDP நிறுவனத்தின் தொழில் நுட்ப நிபுணர் ஆகியோர் வளநபர்களாக பங்களிப்பு செய்தனர்.

**2. பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் என்பவற்றுக்கு துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தல் மற்றும் காட்சிப்படுத்தல்**

- நாடு முழுதிலுமுள்ள தேசிய பாடசாலைகளுக்கு (353) சிங்கள மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் 862 துண்டுப் பிரசுரங்கள் சனவரி மாதம் நடைபெற்ற பாடசாலை அதிபர்களின் மாநாட்டில் அதிபர்களுக்கு அறியப்படுத்தி பகிர்ந்தளிக்கப்பட்டன. தற்பொழுது அந்தத் துண்டுப் பிரசுரங்கள் அந்தப் பாடசாலைகளின் விளம்பர பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சகல மாகாண பாடசாலைகளுக்கும் (10,366) சொந்தமான மாகாண கல்விப் பணிப்பாளர்களை சந்தித்து (வட மாகாணம் தவிர) அவர்களுக்கு அறியப்படுத்தி சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சுமார் 13,000 துண்டுப் பிரசுரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அந்தத் துண்டுப் பிரசுரங்கள் தற்பொழுது அந்தப் பாடசாலைகளின் விளம்பர பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் (492) சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சுமார் 2,000 துண்டுப் பிரசுரங்கள் உரிய மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரை சந்தித்து (வட மாகாணம் தவிர) அவர்களுக்கு அறியப்படுத்தி பகிர்ந்தளிக்கப்பட்டன. அந்தத் துண்டுப் பிரசுரங்கள் தற்பொழுது அந்தப் பொலிஸ் நிலையங்களின் விளம்பர பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- 185 நீதிமன்றங்களுக்கு (மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் முதலியன) சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சுமார் 800துண்டுப் பிரசுரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அந்தத் துண்டுப் பிரசுரங்கள் தற்பொழுது அந்த நீதிமன்றக் கட்டிடத்தொகுதி வளாகங்களிலுள்ள விளம்பர பலகைகளில் காட்சிப் படுத்தப் பட்டுள்ளன.

**3. இந்த அதிகார சபையின் வருடாந்த அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

- இந்த அதிகார சபையின் தயாரித்து நிறைவு பெற்ற 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையின் 260 CD களும் மற்றும் 40 அச்சீட்டுப் பிரதிகளும் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- இந்த அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப் பட்டு நீதி அமைச்சின் ஊடாக அமைச்சரவைக்கு 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது.

- இந்த அதிகார சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப் பட்டு நீதி அமைச்சின் ஊடாக அமைச்சரவைக்கு 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது.

**4. 1985 எனும் உடனுக்குடனான தொலைபேசி சேவையின் நிமித்தம் Call Centre வசதிகளை அதிகார சபையில் தாபித்தல்**

- இந்த அதிகார சபையில் இந்த Call Centre வசதிகளை தாபிப்பதற்கு தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. எனினும் மென்பாகங்களுக்கும் மற்றும் கடினப் பாகங்களுக்கும் நிதி அனுசரணையை UNDP நிறுவனம் பெற்றுத் தருவதற்கு உடன்பட்டாலும் இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபையின் அனுமதி அதன் நிமித்தம் தேவையாக இருந்ததால் இதை தற்காலிமாக நிறுத்த தீர்மானிக்கப்பட்டது.

**5. குற்றத்தால் பலியானவர்களுக்கு உதவுதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை தாபித்தல்**

- ஆராய்ச்சி நிலையத்தை தாபிக்கும் பொருட்டு புத்தகங்களை கொள்வனவு செய்தல்.
- UNDP நிறுவனம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் குற்றவியல் கல்விப் பிரிவுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளுக்கு சேவை சார்ந்த பங்களிப்பை பெற்றுக் கொடுத்தல்.

**6. அதிகார சபைக்கு ஒரு இணையத்தளத்தை தாபித்தல்**

- இதற்கான எண்ணக்கருப் பத்திரம் (Concept Note), பிரேரணைகள் (Proposal) மற்றும் நியதிக் குறிப்புகள் (Terms of Reference) என்பன தயாரிக்கப்பட்டன. தொழில் நுட்ப உதவி வழங்கப்பட்டது.

**2015 இன் 4 ஆம் இலக்க சட்டம் பற்றி ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம்**

திகதி - 2020.01.09

இடம் - பத்தரமுல்ல வோர்ட்டெஸ் எட்ஜ் ஹோட்டல் பங்குபற்றிய ஊழியர்கள் எண்ணிக்கை - 86















# நிதிப் பிரிவு

**2020.01.01 ஆம் திகதி முதல் 2020.12.31 ஆம் திகதி வரையான நிதி சார்ந்த முன்னேற்றம்**

- 2015 இன் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் பாதுகாப்பு நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் அதன் நிதி வலிமை 10.87 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது.

**2020/12/31 ஆம் திகதிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகள் பற்றிய சுருக்கமான விபர அறிக்கை**

| செலவினத் தலைப்பும் விபரமும் | 2020 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் (சனவரி - திசம்பர்) (ரூ.) | 2020.12.31 ஆம் திகதிற்கு திருத்திய மதிப்பீடு (ரூ.) | 2020.12.31 ஆம் திகதிற்கான செலவு (ரூ. ) | மீதி/மிகை (ரூ.) | மீதி/ மிகை (%) |
|---|---|---|---|---|---|
| 1503 (மீண்டெழும் செலவு) | 45,790,000.00 | 35,790,000.00 | 36,193,581.00 | (403,581.00) | 1.12% |
| 2201 (மூலதன செலவு) | 4,000,000.00 | 4,000,000.00 | 1,389,005.00 | 2,610,995.00 | 65.27% |

## 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

### 1. கூட்டிணைந்த தகவல்கள்

### 1.1. தாபிப்பும் சட்டமுறையான அமைப்பும்

2015 இன் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தினால் குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபை இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் பாராளுமன்றத்தால் தாபிக்கப்பட்டது. நீதி அமைச்சின் கீழ் அதன் சேவை விநியோக விடயப் பிரிவு விஸ்தரிக்கப்பட்டது. இந்த அதிகார சபையின் தலைமை அலுவலகம் இலங்கையில் இலக்கம் 428/11ஏ, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் இடத்தில் அமைந்துள்ளது.

### 1.2 அடிப்படை செயற்பாடுகளும் மற்றும் செயற்பாடுகளின் தன்மையும்

குறித்த சட்டத்தின் குறிக்கோள்களை அடையும் அம்சத்தில், இந்த அதிகார சபையின் கடமைகளும் அதே நேரம் தொழிற்பாடுகளும் 2015 இன் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

### 1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2020 ஆண்டு இறுதியளவில் காணப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 36 ஆகும்.

### 2. கணக்குகளை தயாரிக்கும் அடிப்படை

### 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் நிதி நிலைக் கூற்று, நிதி சார்ந்த செயலாற்றுகை கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, ஒதுக்கீடுகளிலுள்ள மாற்றம், நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்தக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால்

விதிக்கப்பட்டுள்ள இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2. அளவீட்டு அடிப்படை**

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள பணவீக்கம் சார் காரணிகளுக்கு எந்தவிதமான சீராக்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

**2.2 தொழிற்படு நாணயம்**

இந்த நிதிக் கூற்றுக்கள் குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் தொழிற்படு நாணயமாகிய இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

கீழே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்களில் காணப்படும் சகல காலப் பகுதிகளுக்கும் சரியாக தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**3.1. சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் ஆகுசெலவு என்பது அவற்றின் எதிர்பார்த்த பாவனையின் நிமித்தம் தொழிற்படும் நிலைக்கு அத்தகைய சொத்துக்களை கொண்டுவருவதற்காக ஏற்பட்டுள்ள ஏதாவது செலவுகள் அடங்கலாக அவற்றின் கொள்வனவு அல்லது நிர்மாண செலவு என பொருள்படும். ஆகுசெலவில் சொத்தாக ஆரம்பத்தில் இணங்காணப்படுவதையடுத்து, மீள்விலை மதிப்பிடப்படும் அத்தகைய சொத்துக்கள் அதனையடுத்து வருகின்ற அந்த சொத்துக்களின் மீள்விலைமதித்த ஏதாவது குறைந்த தேய்மான தொகையில் எடுத்துக்காட்டப்படுகின்றன. ஏனைய சகல சொத்துக்களும், பொறித்தொகுதிகளும், உபகரணங்களும் குறைந்த திரண்ட தேய்மான ஆகுசெலவில் எடுத்துரைக்கப் படுகின்றன. ஏனைய சகல சொத்து, பொறித் தொகுதி, உபகரணம் என்பன வித்தியாசமான பாவனை காலங்களையுடைய பாரிய உதிரிப்பாகங்களை கொண்டு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகையவை தனித்தனி சொத்தாகவும், பொறித் தொகுதியாகவும், உபகரணங்களாகவும் கணக்கீடு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும் சொத்துக்களின் நிலுவைப் பெறுமானங்கள், பாவனை காலங்கள் மற்றும் தேய்மான முறையியல்கள் என்பன மீளாய்வு செய்யப் பட்டு சீராக்கப்படுகின்றன.

**மானியமாக கிடைத்த சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

ஏதாவது மானியத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன ஆகுசெலவில் மூலதனமாக்கப் படுகின்றன.

சின்னக்கர காணிகள் தவிர சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன குறைந்தளவான திரண்ட தேய்மான ஆகுசெலவில் எடுத்துரைக்கப் படுகின்றன. சின்னக்கர காணி ஆகுசெலவில் எடுத்துரைக்கப் படுகின்றது.

மதிப்பிடப்பட்ட பாவனை காலத்தின் மீதான ஆகுசெலவுகளை பதிவழிக்கும் பொருட்டு சின்னக்கர காணி தவிர்ந்த ஏனைய சகல சொத்துக்களுக்கும், பொறித் தொகுதிகளுக்கும் மற்றும் உபகரணங்களுக்கும் தேய்மானம் கணிப்பிடப் படுகின்றது.

குறித்த ஆண்டிற்கான தேய்மானம் விகித அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றுக்கு கீழே குறிப்பிடப் பட்டுள்ளவாறு நேர் நிரல் முறையியலின் அடிப்படையில் தேய்மானம் கணிப்பிடப் பட்டுள்ளது. மேலும், சகல சொத்துக்களும், பொறித் தொகுதிகளும் மற்றும் உபகரணங்களும் **SLPSAS 7** எனும் நியமத்தில் (சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்) குறிப்பீடு செய்யப்பட்டவாறு ஆகுசெலவு முறையியலில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் | 25% |
| 2. | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 10% |
| 3. | அலுவலக வளாகம் | 4% |
| 4. | மென்பாகங்கள் | 25% |
| 5. | ஏனையவை | 10% |

ஒரு சொத்து, ஒரு பொறித் தொகுதி மற்றும் ஒரு உபகரணம் அகற்றலின் அல்லது அதன் பாவனையிலிருந்து எதிர்பார்த்த எதிர்கால பொருளாதார நன்மை கிடையாத

போது அல்லது அகற்றலின் போது இனங்காணப்படுகின்றது. சொத்து இணங்காணப் படாது விடப்படுவதன் அடிப்படையில் எழுகின்ற ஏதாவது ஒரு இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றல் வருமானத்திற்கும் மற்றும் சொத்துக்களின் கொணரப்படும் தொகைக்கும் இடையில் வித்தியாசம் என கணிப்பிடப்பட்டுள்ள) அந்த சொத்து இனங்காணப்படாது விடப்படும் ஆண்டின் வருமான கூற்றில் உள்ளடக்கப் படுகின்றது.

மீள்தாபிக்கும் அல்லது உண்மையாக மதிப்பிடப்பட்ட நியம செயலாற்றுகையிலிருந்து எதிர்பார்த்த எதிர்கால பொருளாதார நன்மையை பேணும் பொருட்டு சொத்துக்களின், பொறித் தொகுதிகளின் மற்றும் உபகரணங்களின் பழுதுதுபார்ப்புகள் அல்லது பராமரிப்பு தொடர்பாக ஏற்படும் செலவினமானது அத்தகைய செலவினம் ஏற்படும் போது ஒரு செலாவக இனங்காணப்படுகின்றது.

## 3.2 பொருட்கள் இருப்பு

குறித்த நிதியாண்டு காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள், ஆகுசெலவில் வருமான செலவின கூற்றில் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

எஞ்சிய பொருட்கள் ஆகுசெலவில், விற்பனை விலையில் அல்லது தேறிய பெறுமானத்தில் எது குறைந்ததோ அதில் விலைமதிப்பிடப்பட்டுள்ளன.

## 3.3. காசும் காசு ஒப்புரவுகளும்

கையிலும் வங்கியிலும் உள்ள காசு, காசும் காசு ஒப்புரவுகளிலும் உள்ளடங்குகின்றன.

## 3.4. காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று நேர்மறை முறையியலை பிரயோகித்து தயாரிக்கப் பட்டுள்ளது.

## 3.5. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

பொருளாதார நன்மைகளை கொண்டிருக்கின்ற வளங்களின் ஒரு வெளிப் பாய்ச்சலுக்கு பயனாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்ற கூற்றில் கடந்த கால நிகழ்வுகளால் ஒரு தற்போதைய கடப்பாடு இருக்கின்ற போது, பொறுப்புக்கள் ஐந்தொகையில் இனங்காணப் படுகின்றன. கடனாளிகளின் கோரிக்கையில் அல்லது ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் செலுத்தித் தீர்க்க வேண்டியுள்ள பொறுப்புக்கள் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்கள் என கணிப்பிடப் படுகின்றன.

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை, கடந்த கால ஒரு நிகழ்வின் பயனாக, நம்பத்தகுந்தளவில் மதிப்பிடப்படக் கூடிய தற்போதைய ஒரு சட்டமுறையான கடப்பாட்டை அல்லது ஒரு ஆக்கபூர்வமான கடப்பாட்டை அதாவது அந்த கடப்பாட்டை நிறைவு செய்யும் நிமித்தம் அநேகமாக ஒரு பொருளாதார வெளிப்பாய்ச்சல் நன்மை தேவைப்பட்டால், ஏற்பாடு இனங்காணப்படும்.

## 3.6. வரிவிதிப்பு

நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட வரி சார்ந்த செலவுகள் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அந்த சட்டத்திற்கான திருத்தங்கள் ஆகியவற்றுக்கு இணங்க கணிப்பிடப்பட்டுள்ளன.

## 3.7. ஊழியர் நன்மைகள்

### I. திட்டவட்டமான ஓய்வூதிய பங்களிப்புத் திட்டம்

திட்டவட்டமான ஓய்வூதிய பங்களிப்புத் திட்டத்திற்கான கடப்பாடுகள் அவை செலவாக ஏற்பட்டது போல் வருமான கூற்றில் இனங்காணப்படுகின்றன. ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 12% மற்றும் 3% வீதங்களை குற்றத்தால் பாதிக்கப்பட்டோரையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் செலுத்துகின்றது.

### II. திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்தின் வரைவிலக்கணம்

ஓய்வூதிய பணிக்கொடை திட்டவட்டமான ஒரு ஓய்வூதிய நன்மைகள் திட்டமாகும். உரிய நியதிச்சட்டத்தின் பிரகாரம், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்தத் தேசிய அதிகார சபை பணிக்கொடையை செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு, முதலாவது வருட சேவை ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு வருட சேவை நிறைவுக்கும், சகல ஊழியர்களினதும் கடந்த நிதியாண்டின் அரை மாத சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படும் தொகைக்கு சமனாக, ஐந்தொகையில் ஒரு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய பணிக்கொடை தொடர்பில் சகல ஊழியர்களுக்கும் ஓய்வூதிய பணிக்கொடை நிமித்தம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த விடயம்

ஐந்தொகை கணக்கில் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் வகைப் படுத்தப்படுகின்றது.

திறைசேரிக்கு இணங்க, அது தேவையான போது நிதியை வழங்குவதால், இவ்வாறான நிதியேற்பாடு அவசியமில்லை.

**3.8. அதிகார சபையின் நிதியங்கள்**

குறித்த சட்டத்தின் 18 மற்றும் 29 ஆம் பிரிவுகளின் பிரகாரம், இந்த அதிகார சபைக்கு இரண்டு (2) நிதியங்கள் சொந்தமாகவுள்ளன.

**1.** அதிகார சபையின் நிதியம்

இந்த நிதிக்கு பின்வரும் விதத்தில் நிதி வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

இந்த அதிகார சபையின் பயன்பாட்டிற்காக பாராளுமன்றத்தினால் அவ்வப்பொழுது ஒதுக்கப்படலாம் எனும் அத்தகைய சகல நிதிகளும், மற்றும் நன்கொடையாக, சன்மானமாக, வாரிசாக மற்றும் மானியங்களாக இந்த அதிகார சபைக்கு கிடைக்கலாம் என அத்தகைய சகல நிதிகளும்

குறித்த சட்டத்தின் கீழ் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகளையும் மற்றும் தொழிற்பாடுகளையும் நிறைவேற்றுவதில் இந்த அதிகார சபைக்கு ஏற்படும் செலவு அதிகார சபையின் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**2.** பாதுகாப்பு நிதி

பாதுகாப்பு நிதியத்திற்கு பின்வருமாறு நிதி வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

-இந்த நிதியத்திற்கு பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்படும் சகல நிதிகளும்.

-ஏதாவது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து ஏதாவது சன்மானமாக, நன்கொடையாக, பங்களிப்பாக, வாரிசாக மற்றும் மானியமாக இந்த பாதுகாப்பு நிதிக்கு அனுப்ப வேண்டிய சகல நிதிகளும்

-குறித்த சட்டத்தின் 28 ஆம் பிரிவினது (1) (a) (ii) உப பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் அனுப்பிவைக்கப்படும் அத்தகைய சகல நிதிகளும்

குறித்த சட்டத்தின் 29 ஆம் பிரிவினது (4)(a) மற்றும் (b) ஆம் உப பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுக்கு என முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படலாம் எனும் தொகை இந்த பாதுகாப்பு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**3.9. வருமான இனங்காணல்**

**3.9.1 வருமான இனங்காணல்**

குறித்த சட்டத்தின் 28 ஆம் பிரிவினது (1) (a) (ii) ஆம் உப பிரிவின் கீழ் ஒரு நீதி மன்றத்தால் அனுப்பப்படும் அத்தகைய சகல நிதிகளும் கிடைப்பனவு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்ற அதே வேளையில் வட்டியும் மற்றும் ஏனைய எல்லா வருமானமும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

**3.9.2 செலவினம்**

இந்த அதிகார சபையை நிருவகிப்பதில் ஏற்பட்ட சகல வகையான செலவுகளும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதிகார சபையின் சம்பாத்திய ஆற்றலை தொடர்ந்து பேணும் அல்லது அதிகரிக்கும் பொருட்டு ஒரு நிரந்தர தன்மையில் சொத்தை கொள்வனவு செய்யும், விரிவடையச் செய்யும் அல்லது மேம்படுத்தும் விடயத்தில் ஏற்பட்ட சகல செலவுகளும் மூலதன செலவுகளாக கருதப்பட்டுள்ளன.

**3.10. ஒத்தீட்டுத் தகவல்கள்**

தேவையானவிடத்து, நடைமுறையாண்டின் சமர்ப்பணத்தை உறுதிசெய்யும் பொருட்டு ஒத்தீட்டுப் புள்ளிவிபரங்கள் மீளொழுங்கமைக்கப்பட்டுள்ளன.

**3.11. ஐந்தொகைத் திகதிற்கு பின்னர் எழும் நிகழ்வுகள்**

ஐந்தொகைத் திகதிற்கு பின்னர் எழுந்த சகல பொருண்மையான நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு, நிதிக் கூற்றுக்கான அந்தந்த குறிப்புக்களில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

**3.12. பொறுப்புக்களும் இடைநேர்வுகளும்**

இடைநேர்வுகள் என்பது கடந்த கால நிகழ்விலிருந்து எழுகின்ற சாத்தியமான சொத்துக்கள் அல்லது கடப்பாடுகள் ஆகும். இதனை குறிப்பிட முடியாத எதிர்கால நிகழ்வுகளின் நிகழ் அல்லது நிகழா தன்மையின் அடிப்படையில் மாத்திரம் உறுதிசெய்துகொள்ள முடியும். இவை இந்த அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பால்பட்டவையாகும்.

### 3.13. மானியங்களின் கணக்கீடு

#### i. அரசாங்க மானியங்கள்

சமர்ப்பண முறையியல்கள் அடங்கலாக அரசாங்க மானியங்களுக்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் பின்வருமாறு:

அ. சொத்துக்களின் கொள்வனவுக்கான அரசாங்க மானியங்கள் அத்தகைய சொத்துக்களின் பயனுள்ள பாவனை காலங்களின் மீது வருமானமாக இனங்-காணப்படுகின்றன.

ஆ. கிடைத்த ஏனைய மானியங்கள் மற்றும் அவற்றின் மீதான செலவுகள் இலாப நட்ட கணக்கில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

### 3.14. முதலீடு

அதிகார சபையின் நிதியத்திற்கு வரவுவைக்க வேண்டிய முதலீட்டு நிதிகள் வங்கியில் நடைமுறை, சேமிப்பு, அல்லது வைப்பு கணக்குகளை திறந்து பேணுவதனூடாக உகந்த மற்றும் பாதுகாப்பான ஒரு முறையில் வரவுவைக்க வேண்டும் என குறித்த சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (ஆ) ஆம் உப பிரிவு விபரிக்கின்றது.

குறித்த சட்டத்திற்கு இணங்க, அதிகார சபையின் நிதிக்கு வரவுவைக்க வேண்டிய நிதிகள் பொருத்தமான பாதுகாப்பான சாதனங்களில் முதலீடு செய்யப்பட வேண்டும். அந்த முதலீடுகள் ஆகுசெலவு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும். அத்தகைய முதலீடுகளிலிருந்து ஈட்டப்படுகின்ற வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும்.

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

### 2020 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான நிதி நிலைக் கூற்று

| | குறிப்பு இலக்கம் | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | **08** | 3,022,818 | 4,749,968 |
| பொறுப்புக்கள் | **09** | 30,000 | 30,000 |
| ஏனைய சொத்துக்கள் | **10** | 1,436,940 | 1,578,031 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **4,489,758** | **6,357,999** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| **மூதலீடு** | **11** | 10,036,192 | 2,163,300 |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | **12** | 17,274,667 | 19,657,940 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **27,310,859** | **21,821,240** |
| **மொத்த சொத்துக்கள்** | | **31,800,617** | **28,179,239** |
| கழிக்குக: | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | **13** | **1,571,290** | **1.238,653** |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **1,571,290** | **1.238,653** |
| **தேறிய நடைமுறைச் சொத்துக்கள்** | | **2,918,467** | **5,119,347** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | **14** | **1,999,175** | **1,033,949** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **3,570,465** | **2,272,601** |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | | **28,230,151** | **25,906,638** |
| **பின்வரும் விதத்தில் நிதியிடப்பட்டது** | | | |
| திரட்டு நிதி | **15** | (1.687,777) | 1,031,556 |

| | | | |
|---|---|---|---|
| அதிகார சபையினது பாதுகாப்பு நிதியம் | **16** | 10,870,309 | 3,963,140 |
| அரசாங்க மானியங்கள் | **17** | 14,475,118 | 14,806,284 |
| ஐநாஅநிதி (UNDP) | | | |
| மானியங்கள் | **18** | 4,572,501 | 6,105,648 |
| | | **28,230,151** | **25,906,638** |

பக்க இலக்கம் 1 - 5 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், பக்க இலக்கம் 10 முதல் 15 வரையான பக்கங்களில் காணப்படும் குறிப்புகள் ஆகியன இந்த நிதிக் கூற்றின் இன்றியமையாத பாகங்களாகும். இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பது முகாமைத்துவ சபையின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டுள்ளன.

ஒப்பமிடப்பட்டது:

ஜி.ஐ.ஆர். பெரேரா
பணிப்பாளர் (நிதி)

உதயகுமார அமரசிங்க
பணிப்பாளர் நாயகம்

சுஹத கே. கமலத்
தலைவர்

மருத்துவர் நீல் பெர்னாந்து
முகாமைத்துவ சபை உறுப்பினர்

என்.எச்.எம்.டப்ளியூ.டப்ளியூ.என். ஹேரத்
முகாமைத்துவ சபை உறுப்பினர்

**குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை**

**2020 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்று**

| | குறிப்பு இலக்கம் | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | **1** | | |
| மானியங்கள் | **1.1** | 34,498,500 | 38, 964,130 |
| ஏனைய வருமானம் | **1.2** | 3,794,313 | 18,749,310 |
| **மொத்த வருமானம்** | | **38,292,813** | **57,713,440** |
| **இயக்கச்செயற்பாடு சார்ந்த செலவுகள்** | | | |
| தனியாள் வேதனாதிகள் | **2** | 29,871,329 | 28,155,264 |
| பிரயாணச் செலவுகள் | **3** | 206,025 | 242,668 |
| வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | **4** | 2,683,763 | 4,193,854 |
| பராமரிப்புச் செலவுகள் | **5** | 2,555,493 | 3,458,610 |
| ஒப்பந்த சாார் சேவைகள் | **6** | 2,256,233 | 18,400,264 |
| தேய்மானம் | **7** | 3,439,313 | 2,719,015 |
| **மொத்தச் செலவுகள்** | | **41,012,156** | **57,169,675** |
| **குறித்த காலப் பகுதிற்கான மிகை/ (பற்றாக்குறை)** | | **(2,719,343)** | **543,765** |

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

## 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த அண்டிற்கான காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று

| | | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|---|
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| குறித்த ஆண்டிற்கான மிகை/(பற்றாக்குறை) | | (2,719,343) | 543,765 |
| கழிக்குக: | நிலையான சொத்துக்கள் விற்பனையிலிருந்து கிடைத்த இலாபம் | - | - |
| | மூலதன மானியங்கள் செயற்படுத்துகை | (3,624,313) | (18,500,810) |
| கூட்டுக: | குறித்த ஆண்டிற்கான தேய்மானம் | 3,439,313 | 2,719,015 |
| | ஓய்வூதிய பணிக்கொடைகளுக்கான நிதியேற்பாடு | 965,226 | 593,544 |
| **செயல்படு மூலதனத்திற்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாட்டு மிகை/ (பற்றாக்குறை)** | | **(1,939,117)** | **(14,644,486)** |
| | பொருட்கள் இருப்பு அதிகரித்தல் | 327,997 | (365,876) |
| | வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் அதிகரித்தல் (குறைவு) | (186,906) | (52,435) |
| | முன்னைய கொடுப்புகள் அதிகரித்தல் | - | (15,000) |
| | திரண்ட செலவுகளினதும் மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளினதும் அதிகரிப்பு | 332,638 | 992,138 |
| | குறித்த ஆண்டு காலப் பகுதியில் செலுத்தப்பட்டுள்ள ஓய்வூதிய பணிக்கொடைகள் | - | - |
| | | **473,729** | **558,827** |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | **(1,465,388)** | **(14,085,658)** |
| **முதலீடு சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் காய்சுப் பாய்ச்சல்கள்** | | | |
| | நிலையான சொத்துக்கள் கொள்வனவு | (1,056,040) | (6,894,213) |

| | | |
|---|---|---|
| நிலையான சொத்துக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் நிதிகள் முதலீடு | - | - |
| **முதலீடு** | (7,872,892) | (2,163,300) |
| **முதலீடு சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(8,928,931)** | **(9,057,513)** |
| **நிதி சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | |
| உள்ளநக நிதியத்திற்கான தேறிய வருமானம் | 6,907,169 | 3,407,340 |
| மூலதன மானியங்கள் | 1,760,000 | 23,930,000 |
| **நிதி சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **8,667,169** | **27,337,340** |
| **பயன்படுத்தப்பட்டுள்ள தேறிய நிதி** | **(1,727,150)** | **4,194,168** |
| **2020.01.01 ஆம் திகதிற்கான காசும் காசுக்கு சமனானவைகளும்** | **4,749,968** | 555,800 |
| **2020 .12.31 ஆம் திகதிற்கான காசும் காசுக்கு சமனானவைகளும்** | **3,022,818** | **4,749,968** |

**குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை**

**2020 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இருப்புக்களிலுள்ள வித்தியாசங்கள் பற்றிய கூற்று**

| | நிதி (ரூ.) | மானியங்கள் (ரூ.) | ஒட்டுமொத்த நிதி மற்றும் இருப்புக்கள் (ரூ.) | கூட்டுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 2019 சனவரி 1 ஆம் திகதிற்கான நிலுவை | 555,800 | 15,482,742 | 487,801 | 16,526,343 |
| குறித்த ஆண்டிற்கான அறவீடுகள் | - | 23,930,000 | 543,765 | 24,473,765 |
| குறித்த ஆண்டிற்கான மாற்றல்கள் | 3,407,340 | (18,500,810) | - | (15,093,470) |
| 2019 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை | **3,963,140** | **20,911,932** | **1,031,566** | **25,906,638** |
| 2020 சனவரி 1 ஆம் திகதிற்கான நிலுவை | 3,963,140 | 20,911,932 | 1,031,566 | 25,906,638 |
| குறித்த ஆண்டிற்கான அறவீடுகள் | - | 1,760,000 | (2,719,343) | (959,343) |
| குறித்த ஆணடிற்கான மாற்றல்கள் | 6,907,169 | (3,624,313) | - | 3,282,856 |
| 2020 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை | **10,870,309** | **19,047,619** | **(1,687,777)** | **28,230,151** |

<u>நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு</u>

| குறிப்பு 01<br>வருமானம் | 2020<br>(ரூ.) | 2019<br>(ரூ.) |
|---|---|---|
| **1.1 - மானியங்கள்** | | |
| <u>அரசாங்க மானியங்கள் - மீண்டெழும் மானியங்கள்</u> | | |
| குறித்த ஆண்டிற்கான வருமதிகள் | 34,498,500 | 38,964,130 |
| குறித்த ஆண்டிற்கான மீள்கொடுப்பனவுகள் | - | |
| | 34,498,500 | 38,964,130 |
| **1.2 - ஏனைய வருமானங்கள்** | | |
| <u>ஏனைய வருமானம்</u> | | |
| குறித்த ஆண்டிற்கான வருமதிகள் | 170,000 | 248,500 |
| குறித்த ஆண்டிற்கான மீள்கொடுப்பனவுகள் | - | - |
| | 170,000 | 248,500 |
| <u>பிற்போடப்பட்டுள்ள வருமானம்</u> | | |
| பிற்போடப்பட்டுள்ள வருமானம் - அரசாங்க மானியங்கள் | 2,091,166 | 4,063,684 |
| பிற்போடப்பட்டுள்ள மானியங்கள் - ஐநாஅநிதி (UNDP) மானியங்கள் | 1,533,147 | 14,437,126 |
| | 3,624,313 | 18,500,810 |
| **மொத்த வருமானம்** | **38,292,813** | **57,713,440** |

****2020 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவுகளின் நிமித்தம் அதிகார சபைக்கு 45,790,000.00 ரூபா தொகையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும், 2020 ஆம் ஆண்டிற்கு மீண்டெழும் செலவுகளின் நிமித்தம் தேவையாக இருந்த 35,790,000.00 ரூபா தொகை மாத்திரம் செலவிடப்படாமல் எஞ்சியிருந்தது. மேலும் எஞ்சிய 10, 000, 000.00 ரூபா தொகையான நிதி, நிரல் அமைச்சுக்கு மீண்டும் ஒதுக்கப்பட்டது.**

| குறிப்பு 02<br>செலவுகள் | 2020<br>(ரூ.) | 2019<br>(ரூ.) |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **தனியாள் வேதனாதிகள்** | | |
| சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் | 17,748,718 | 14,269,541 |
| ஊழியர் சேமலாப நிதி | 2,465,150 | 2,095,156 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி | 616,287 | 523,789 |
| மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 442,605 | 1,156,276 |
| ஓய்வூதியப் பணிக்கொடைகள் | 965,226 | 593,544 |
| பதில் கடமைகளுக்கான கொடுப்பனவுகள் | - | 52,210 |
| பிரயாணக் கொடுப்பனவுகள் | 2,561,000 | 1,833,871 |
| எரிபொருள் கொடுப்பனவுகள் | 1,198,902 | 1,135,290 |
| வாழ்க்கைச் செலவுக்கான கொடுப்பனவுகள் | 3,258,840 | 3,055,516 |
| சீராக்கல் கொடுப்பனவுகள் | - | 391,921 |
| தொழில்சார் கொடுப்பனவுகள் | 275,600 | 288,000 |
| முகாமைத்துவ சபை | | |
| உறுப்பினர்களுக்கான | 229,000 | 1,828,000 |
| கொடுப்பனவுகள் | | 832,151 |
| ஏனைய கொடுப்பனவுகள் | - | 100,000 |
| பயிற்சிக்கான கொடுப்பனவுகள் | 110,000 | |
| **கூட்டுத் தொகை** | **29,871,329** | **28,155,264** |

| **குறிப்பு 03**<br>**பிரயாணச் செலவுகள்** | **2020**<br>**(ரூ.)** | **2019**<br>**(ரூ.)** |
|---|---|---|
| உள்நாட்டுப் பிரயாணச் செலவுகள் | 206,025 | 214,217 |
| வெளிநாட்டுப் பிரயாணச் செலவுகள் | - | 28,451 |
| **கூட்டுத் தொகை** | **206,025** | **242,668** |

| **குறிப்பு 04**<br>**வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள்** | **2020**<br>**(ரூ.)** | **2019**<br>**(ரூ.)** |
|---|---|---|
| அச்சீடு மற்றும் காகிதாதிகள் | 526,887 | 1,297,649 |
| எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய்கள் | 987,979 | 1,483,234 |
| சீருடைகள் | 36,000 | 36,000 |
| பொழுதுபோக்கு விடயங்கள் | 264,547 | 552,912 |
| வணிக விளம்பரங்கள் | 648,961 | 736,362 |
| செய்திப் பத்திரிகைகள் | 14,350 | 14,520 |
| ஏனைய வழங்கல்கள் | 205,039 | 73,177 |
| **கூட்டுத் தொகை** | **2,683,763** | **4,193,854** |

| குறிப்பு 05<br>பராமரிப்பு சார்ந்த செலவுகள் | 2020<br>(ரூ.) | 2019<br>(ரூ.) |
|---|---|---|
| பராமரிப்புச் செலவுகள் - வாகனங்கள் | 1,811,849 | 2,282,640 |
| பராமரிப்புச் செலவுகள் - பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 700,155 | 841,708 |
| பராமரிப்புச் செலவுகள் - கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 43,489 | 334,262 |
| **கூட்டுத் தொகை** | **2,555,493** | **3,458,610** |

| குறிப்பு 06<br>ஒப்பந்தம் சார்ந்த சேவைகள் | 2020<br>(ரூ.) | 2019<br>(ரூ.) |
|---|---|---|
| போக்குவரத்து | 17,650 | 24,548 |
| தொலைத்தொடர்புக் கட்டணங்கள் | 744,213 | 764,853 |
| தபால் கட்டணங்கள் | 66,555 | 74,210 |
| வங்கிக் கட்டணங்கள் | - | 8,511 |
| துற்புரவேற்பாடு சார்ந்த கட்டணங்கள் | 808,117 | 970,507 |
| ஏனைய சேவைகள் - அரசாங்கத்தின் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் | - | 2,869,192 |
| ஏனைய சேவைகள - ஐநாஅறிதி (UNDP) விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் | - | 12,912,603 |
| ஏனைய சேவைகள் - கணக்காய்வுக் கட்டணங்கள் | 321,278 | 744,941 |
| ஏனைய சேவைகள் - ஏனையவை | 298,419 | 30,899 |
| **கூட்டுத் தொகை** | **2,256,233** | **18,400,264** |

| குறிப்பு 07<br>தேய்மானம் பற்றிய விபரம் | 2020<br>(ரூ.) | 2019<br>(ரூ.) |
|---|---|---|
| அலுவலக வளாகங்கள் புனர்நிர்மாணம் - அரசாங்க மானியங்கள் | 91,855 | 81,685 |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் - அரசாங்க மானியங்கள் | 940,885 | 753,979 |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் - ஐநாஅறிதி (UNDP) - மானியங்கள் | 341,507 | 341,507 |
| கணனிகள் மற்றும் துணைப் பாகங்கள் - அரசாங்க மானியங்கள் | 702,120 | 299,524 |
| கணனிகள் மற்றும் துணைப் பாகங்கள் - ஐநாஅறிதி (UNDP) - மானியங்கள் | 1,162,900 | 1,162,900 |
| மென்பாகங்கள் அபிவிருத்தி - அரசாங்க மானியங்கள் | 171,307 | 59,305 |
| ஏனைய மானியங்கள் - ஐநாஅறிதி (UNDP) - மானியங்கள் | 28,740 | 20,116 |
| **கூட்டுத் தொகை** | **3,439,313** | **2,719,015** |

| **குறிப்பு 08**<br>**கையிலும் மற்றும் வங்கியிலும் உள்ள காசு** | **2020**<br>**(ரூ.)** | **2019**<br>**(ரூ.)** |
|---|---|---|
| இலங்கை வங்கி - C/A-81479591 | 2,270,578 | 2,927,563 |
| இலங்கை வங்கி - அதிகார சபையினது நிதியம்<br>C/A-81624249 | 752,240 | 1,822,405 |
| சாதாரண நிதி | - | - |
| **கூட்டுத் தொகை** | **3,022,818** | **4,749,968** |

| **குறிப்பு 09**<br>**வைப்புக்கள்** | **2020**<br>**(ரூ.)** | **2019**<br>**(ரூ.)** |
|---|---|---|
| மீளளிக்கத்தகு வைப்புக்கள் - எரிபொருள் | 30,000 | 30,000 |
| **கூட்டுத் தொகை** | **30,000** | **30,000** |

| **குறிப்பு 10**<br>**ஏனைய சொத்துக்கள்** | **2020**<br>**(ரூ.)** | **2019**<br>**(ரூ.)** |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய வட்டி - நிலையான வைப்புக்கள் | 81,877 | 52,435 |
| முற்பணம் - இணையத்தள நிர்மாணம் | 157,464 | - |
| தொகை இருப்பு | 1,197,599 | 1,525,596 |
| **கூட்டுத் தொகை** | **1,436,940** | **1,578,031** |

| **குறிப்பு 11**<br>**முதலீடு** | **2020**<br>**(ரூ.)** | **2019**<br>**(ரூ.)** |
|---|---|---|
| முதலீடு - நிலையான சொத்துக்கள் | 10,036,192 | 2,163,300 |
| **கூட்டுத் தொகை** | **10,036,192** | **2,163,300** |

**குறிப்பு 12** **குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை - 2020 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலையான சொத்துக்கள் பற்றிய விபரம்**

| விபரம் | அலுவலக வளாகங்கள் | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | கணனிகள் | மென் - பாகங்கள் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| **2020 சனவரி 01 ஆம் திகதிற்கான செலவு** | **2,285,878** | **12,822,013** | **7,458,600** | **685,226** | **287,397** | **23,539,114** |
| சேர்வுகள் | 85,050 | 323,321 | 539,997 | - | 107,672 | **1,056,040** |
| அகற்றல்கள் | - | - | - | - | - | **-** |
| **2020 திசம்பர் 01 ஆம் திகதிற்கான செலவு** | **2,370,928** | **13,145,334** | **7,998,597** | **685,226** | **395,069** | **24,595,153** |
| **2020 சனவரி 01 ஆம் திகதிற்கான திரண்ட தேய்மானம்** | **114,117** | **1,652,955** | **2,030,516** | **63,470** | **20,116** | **3.881,174** |
| தேய்மானம் | 91,855 | 1,282,392 | 1,865,020 | 171,307 | 28,740 | **3,439,313** |
| அகற்றல்கள் | - | - | - | - | - | **-** |
| **2020 திசம்பர் 31 ஆம் திகதிற்கான திரண்ட தேய்மானம்** | **205,972** | **2,935,347** | **3,895,536** | **234,776** | **48,855** | **7,320,487** |
| **2020 சனவரி 01 ஆம் திகதிற்கு பதிவழிக்கப்பட்டுள்ள பெறுமானம்** | **2,171,761** | **11,169,058** | **5,428,084** | **621,756** | **267,281** | **19,657,940** |
| **2020 திசம்பர் 31 ஆம் திகதிற்கு பதிவழிக்கப்பட்டுள்ள பெறுமானம்** | **2,164,956** | **10,209,987** | **4,103,061** | **450,450** | **346,213** | **17,274,667** |

**நிலையான சொத்துகளின் கீழ் கட்டிடங்களையும் மற்றும் நிர்மாணங்களையும் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் தலைப்பில் அலுவலக வளாகப் புனர்நிர்மாணமும் மற்றும் மேம்பாடும் என மறுபெயரிடப்பட்டது.

**எமது அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு சுய உரித்துடமை இல்லாத காரணத்தினால் நிலையான சொத்துக்களின் கீழ் அவற்றின் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு 13**<br>**ஏனைய பொறுப்புக்கள்** | **2020**<br>**ரூ.** | **2019**<br>**ரூ.** |
|---|---|---|
| திரண்ட செலவுகள் - ஏனைய கொடுப்பனவுகள் | 14,500 | - |
| திரண்ட செலவுகள் - மேலதிக நேரக் கொடுப்பனவுகள் | 77,270 | 76,966 |
| திரண்ட செலவுகள் - உள்நாட்டுப் பிரயாணச் செலவுகள் | 34,625 | 26,850 |
| திரண்ட செலவுகள் - எரிபொருள் | 53,026 | 114,324 |
| திரண்ட செலவுகள் - தொலைத்தொடர்புகள் | 70,847 | 63,640 |
| திரண்ட செலவுகள் - விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 3873 | 21,866 |
| திரண்ட செலவுகள் - செய்திப் பத்திரிகைகள் | - | 2,400 |
| திரண்ட செலவுகள் - வாகனங்களின் பழுதுபார்ப்புகள் | 44,655 | 13,927 |
| திரண்ட செலவுகள் - துப்புரவேற்பாட்டு வசதிகள் | 76,720 | 82,858 |
| திரண்ட செலவுகள் - போக்குவரத்து | - | 1,200 |
| திரண்ட செலவுகள் – பொழுதுபோக்கு விடயங்கள் | 5080 | - |
| திரண்ட செலவுகள் - விளம்பரங்கள் | 535,075 | - |
| திரண்ட செலவுகள் - ஏனையவை | - | 3,000 |
| மீளளிக்கத்தகு வைப்புக்கள் | 11,680 | 86,680 |
| நிதியேற்பாடு - கணக்காய்வுக் கட்டணங்கள் | 643,939 | 744,941 |
| **கூட்டுத் தொகை** | **1,571,290** | **1,238,652** |

| **குறிப்பு 14**<br>**நடைமுறையல்லாத பற்றுக்கள்/பொறுப்புக்கள்** | **2020**<br>**ரூ.** | **2019**<br>**ரூ.** |
|---|---|---|
| செலுத்த வேண்டியுள்ள ஓய்வூதிய பணிக்கொடைகள் (குறிப்பு 14 (1)) | 1,999,175 | 1,033,949 |
| **கூட்டுத் தொகை** | **1,999,175** | **1,033,949** |

| **குறிப்பு 14(1)**<br>**ஓய்வூதிய பணிக்கொடைகள்** | **2020**<br>**ரூ.** | **2019**<br>**ரூ.** |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 1,033,949 | 440,404 |
| குறித்த ஆண்டிற்கான அறவீடுகள் | 965,226 | 593,544 |
| குறித்த ஆண்டிற்கு செலுத்தப்பட்டுள்ள ஓய்வூதிய பணிக்கொடை நிதிகள் | - | - |
| **கூட்டுத் தொகை** | 1,999,175 | 1,033,948 |

| **குறிப்பு 15**<br>**திரண்ட நிதி** | **2020**<br>**ரூ.** | **2019**<br>**ரூ.** |
|---|---:|---:|
| ஆரம்ப நிலுவை | 1,031,566 | 487,801 |
| குறித்த ஆண்டிற்கான மிகை/பற்றாக்குறை | (2,719,343) | 543,765 |
| **கூட்டுத் தொகை** | **1,687,777** | **1,031,566** |

| **குறிப்பு 16**<br>**அதிகார சபையினது பாதுகாப்பு நிதியம்** | **2020**<br>**ரூ.** | **2019**<br>**ரூ.** |
|---|---:|---:|
| ஆரம்ப நிலுவை | 3,963,140 | 555,800 |
| குறித்த ஆண்டிற்கான மாற்றல்கள் | 6,907,169 | 3,407,340 |
| **கூட்டுத் தொகை** | **10,870,309** | **3,963,140** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| குறிப்பு 17<br>அரச மூலதன மானியங்கள் | 2020<br>(ரூ.) | 2019<br>(ரூ.) |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 14,806,284 | 8,139,968 |
| குறித்த ஆண்டிற்கான வருமதிகள் | 1,760,000 | 10,730,000 |
| குறித்த ஆண்டிற்கான மீள்கொடுப்பனவுகள் | - | - |
| குறித்த ஆண்டிற்கு பிற்போடப்பட்டுள்ள தொகைகள் | (2,091,166) | (4,063,684) |
| **கூட்டுத் தொகை** | **14,475,118** | **14,806,284** |

| குறிப்பு 18<br>ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து கிடைத்த மூலதன மானியங்கள் | 2020<br>ரூ. | 2019<br>ரூ. |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 6,105,648 | 7,342,774 |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்த நிலையான சொத்துக்கள் மானியம் - குறித்த ஆண்டிற்கான வருமதிகள் | - | 287,397 |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்த மானியங்கள் | - | 12,912,603 |
| மானியங்கள் - குறித்த ஆண்டிற்கான கிடைப்பனவுகள் | | |
| குறித்த ஆண்டிற்கான மீள்கொடுப்பனவுகள் | - | - |
| குறித்த ஆண்டிற்கு பிற்போடப்பட்டுள்ள தொகைகள் | (1,533,147) | (14,437,126) |
| **கூட்டுத் தொகை** | **4,572,501** | **6,105,648** |

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை - 2020.12.31 ஆம் திகதிற்கான முதலீடுகள் பட்டியல்

| ආයෝජිතයා /බැංකුව | සහතික අංකය | ආයෝජන | | | | | | | | | කාලසීමාව | වාර්ෂික පොලී අනුපාතිකය | ලැබිය යුතු මුළු පොලිය (රු)) | කල් පිරීමේ දී අගය (රු) | මුළු රඳවා ගැනීමේ බදු 0% දී (රු) | ලැබිය යුතු ශුද්ධ පොලිය(රු) | ශුද්ධ කල් පිරීමේ දී අගය (රු) | | ලැබිය යුතු පොලිය(රු) | | | | | | | | | වසරකට දින ගණන | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | දිනය | | | | | නව ආයෝජන | | මුහුණත අගය (පැරණි) (රු.) | ආයෝජිත මුදල (රු) | | | | | | | | | | | | | | | | | | | |
| | | ආයෝජන | කල් පිරිම | | | | නව (ලද පොලිය)(රු.) | නව එක්රැස්කිරිම් (RS) | | | | | | | | | | | 2020 | 2021 | | | | | | | එකතුව | | |
| SMIB | F/010/04/0023102 | 2021 ඔක් . 05 | 2021 ඔක් . 05 | 10/5/2020 | 12/31/2020 | 10/5/2021 | 214,400 | 1,822,405 | 2,163,300 | 4,200,105 | මාස 12 යි | 6.25% | 262,507 | 4,462,612 | - | 262,507 | 4,462,612 | | 62,570 | 199,937 | - | - | - | - | - | - | 262,507 | | |
| SMIB | F/010/04/0023263 | 2021 දෙසැ .10 | 2021 දෙසැ .10 | 12/10/2020 | 12/31/2020 | 12/10/2021 | - | 5,836,087 | - | 5,836,087 | මාස 12 යි | 5.75% | 335,575 | 6,171,662 | | 335,575 | 6,171,662 | | 19,307 | 316,268 | | | | | | | 335,575 | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | **214,400** | **7,658,492** | **2,163,300** | **10,036,192** | | | **598,082** | **10,634,273** | **-** | **598,082** | **10,634,273** | **-** | **81,877** | **516,204** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **598,082** | | |

**குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை**

**2020 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகார சபையினது பாதுகாப்பு நிதியத்தின் நிதி நிலை பற்றிய கூற்று**

| விபரம் | கூட்டுத் தொகை (ரூ.) |
|---|---|
| நீதிமன்றங்களிலிருந்து கிடைத்த வருமானம்<br><br>தண்டப் பணங்களின் கூட்டுத் தொகை | 6,681,270 |
| **மொத்தக் கூட்டுத் தொகை (அ)** | **6,681,270** |
| **கூட்டுக: வட்டி சார்ந்த வருமானம்** | 243,842 |
| **மொத்த வட்டி (ஆ)** | **243,842** |
| **கழிக்குக: செலவுகள்**<br>வங்கிக் கட்டணங்கள்<br>நஷ்டஈடுகள்<br>நிறுத்தி வைத்தல் வரிகள் | <br>-<br>(17,943)<br>- |
| **மொத்தச் செலவு (இ)** | **(17,943)** |
| | |
| **தேறிய மீதி (அ) + (ஆ + (இ)** | **6,907,169** |

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

## 2020 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகார சபையினது பாதுகாப்பு நிதியத்தின் நிதி நிலை பற்றிய கூற்று

| | 2020 (ரூ. ) | 2019 (ரூ.) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| கையிருப்பிலும் மற்றும் வங்கியிலும் உள்ள காசு - C/A 81624249 | 752,240 | 1,822,405 |
| கிடைக்க வேண்டிய வட்டி - நிலையான வைப்புக்கள் | 81,877 | 52,435 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | **834,117** | **1,874,840** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | |
| முலீடு | 10,036,192 | 2,163,300 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | **10,036,192** | **2,163,300** |
| **மொத்தச் சொத்துக்களின் கூட்டுத் தொகை** | **10,870,309** | **4,038,140** |
| கழிக்குக: | | |
| **பொறுப்புக்கள்** | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| மீளளிக்கத்தகு வைப்புக்கள் | - | 75,000 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | **-** | **75,000** |
| **தேறிய நடைமுறைச் சொத்துக்கள்** | **834,117** | **1,799,840** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | **-** | **-** |
| **மொத்தப் பொறுப்புக்களின் கூட்டுத் தொகை** | **-** | **75,000.00** |

| | | |
|---|---|---|
| **மொத்த தேறிய சொத்துக்களின் கூட்டுத் தொகை** | **10,870,309** | **3,963,140** |
| **நிதியளிக்கப்பட்டது:** | | |
| அதிகார சபை நிதியம் | 10,870,309 | 3,963,140 |
| | **10,870,309** | **3,963,140** |

எனது இல. JPA/B/NAPVCW/ FA/01/20/80 திகதி :- 2021 யூன் 30

பணிப்பாளர் நாயகம்

குற்றங்கள் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை.

**குற்றங்கள் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 அதிகாரசபையின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

---

இந்த கணக்காய்வு அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் அதிகாரசபையின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்று கருத்திற் கொள்ளப்படும். இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் மேவுகை செய்யப்படாமல் இருப்பதுடன் நான் அது தொடர்பாக எவ்வித சான்றிதலொன்றோ அபிப்பிராயத்தை வெளியிடவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணககாய்விற்குரிய எனது பொறுப்பு மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்துவதில்லை கருத்திற் கொள்ளல்

இக்கணக்காய்வு அறிக்கை திகதி முல் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மற்றம் என்னால் செய்யப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் ஏனைய தகவல்கள் போதியளவில் தவறுதலாக குறிப்பிட்டுள்ளதாக நான் தீர்மானித்தால் அவ்விடயத்தை என்னால் அறிகையிடுவது அவசியமாகும். இது தொடர்பாக அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபையின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபை நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடுவதன் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. தவறாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாமல் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக அதிகாரசபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும் வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைத்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது

பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் அதிகாரசபையினால் பேணப்பட்டிருப்பதாகவும்.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது எனவும்

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் ஆளுகை சபை உறுப்பினர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்புட்டுள்ளதாக

2..2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை

(அ) 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(i) பிரகாரம் அரசிற்குரிய வாகனங்களின் பதிவுசெய்யப்பட்ட உரித்து தொடர்பாக சிக்கலை தீர்வுசெய்வதற்கு நடடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டில் மேற்பாவை அமைச்சிலிருந்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த 08 வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச துறையினுள் மனித வள அபிவித்திக்காக 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் பதவியணியின் எவரேனும் உறுப்பினரொருவருக்கு ஓராண்டிற்கு குறைந்தது 12 மணித்தியாலத்திற்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்ச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபை அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை சட்டத்தின் 13(1)(ஊ) பிரிவின் பிரகாரம் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்திலிருந்து இழப்பீட்டை வழங்குவதற்காக உத்தேச முறைமையொன்று தயாரித்து அதனை ஏற்றுக்கொள்ளல் மற்றம் செயற்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சட்டத்தின் 13(1) (கீ) பிரிவின் பிரகாரம் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக முன்மொழிவொன்றை அபிவிருத்தி செய்தல், பயன்படுத்துதல், மற்றும் செயற்படுத்தல் இடம்பெற வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியிருக்கவில்லையெனவும்

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) 2016 ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அதிகாரசபைக்கு கிடைத்த மொத்த முறைப்பாடுகளின் 556 ஆக இருந்ததுடன், பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 266 ஆக இருந்ததுடன் 5 ஆண்டுகளின் இறுதியில் பூர்த்தி செய்யப்படாத மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 290 ஆக இருந்ததுடன் அது மொதத் முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 52 சதவீதமாகும்.

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை சட்டத்தின் 29(4) பிரிவின் பிரகாரம் குற்றமொன்றின் பாதிக்கப்பட்டோருக்காக செலுத்தப்படும் இழப்பீடு மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரின் பேரில் தங்கிவாழ்வோருக்கு செலுத்தப்படும் இழப்பீடு பிரதான செலவினமாக கருதப்படுவதுடன் சட்டத்தின் 2(இ) பிரிவின் பிரகாரம் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கு எதிராக குற்றமொன்று மேற்கொள்வதால் குற்றவாளியிடமிருந்து பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்தல் அதிகாரசபையின் நோக்கமாக கருதப்படுகின்றது. எவ்வாறாயினும்

மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட தண்டப்பணம் ரூபா 6,681,270 ஆக இருந்ததுடன் சட்டத்தின் 29(4) பிரிவின் பிரகாரம் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான செலவினமாக ரூபா 17,943 தொகை மாத்திரம் 4 பேருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாக்கும் நடைமுறை முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கிவல்லை.

(இ) 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சுயமான சம்பவ முகாமைத்துவ முறைமையொன்றை அதிகாரசபையில் ஏற்படுத்துவதற்கும் ஸ்தாபிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதும் 2021 ஏப்ரல் 27 ஆந் திகதி வரை அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் போது தேவைப்படும் ஒத்துழைப்பு அரவணைப்பு பிரிவிற்காக தேவையான பதவியணியினரை சேர்த்துக்கொள்ளும் செயற்பாடு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் செயல்நடவடிக்கைத் திட்டங்களுக்கு உள்ளடக்கப்பட்டிருந்த போதும் அந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2018 ஆம் இலக்க பொது நிர்வாக முகாமைத்துவ சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரஜை/சேவை நாடுனர் விஞ்ஞாபனம் 2021 ஏப்ரல் 20 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) தற்போது அதிகாரசபையில் செயற்படுத்தப்படும் 1985 உடனடி அழைப்பு தொலைபேசி சேவைக்காக Call Centre வசதிகளை ஸ்தாபிப்பதற்கு தேவையான மென்பொருள் மற்றும் வன்பொருட்கள் பெற்றுக்கொள்வதற்கான நிதி அனுசரணை UNDP நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் 2019 நவம்பர் முதல் 2020 நவம்பர் வரை முகாமைத்துவ சபையொன்று நியமிக்கப்படாமையால் அங்கீகாரம் பெற முடியாததால் அந்நிதி மானியம் அதிகாரசபைக்கு கிடைக்காமல் போயிருந்தது.

(ஊ) ஐக்கயி நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான இரண்டாம் கட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஒத்துழைப்பு அரவணைப்பு பிரிவினை ஸ்தாபித்து நடாத்திச்செல்வது தொடர்பான வழிகாட்டலை அபிவிருத்தி செய்தல் மஙற்றும் ஒத்துழைப்பு அரவணைப்பு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட புரொடொகோலொன்று தயாரிப்பதற்க அதிகாரசபைக்க ஒத்துழைப்பு வழங்குதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(எ) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 56 ஆக காணப்பட்ட போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் 36 ஆக இருந்ததுடன், நிறுவகத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் நேரடியாக தாக்கம் செலுத்தும் 15 பதவிகள் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி